
அமல நாதன்

ஆசிரியர் :
வித்துவான் பாலூர் து. கண்ணப்ப முதலியார்
துணைத் தமிழ் விரிவுரையாளர், புதுக்கல்லூரி,
இராயப்பேட்டை, சென்னை.



வெளியிட்டோர் :
மாட்ரோ பப்ளிஷிங் ஹவுஸ்
எடுகேஷனல் பப்ளிஷர்ஸ்
தபால் பெட்டி 152 :: சென்னை - 1

 [விலை அணா 12

Edition—Nov. 1953.

Jyothi Printers, Madras-1.

முன்னுரை

இந்நூல் ஆங்கிலக் கதை முறையினைத் தழுவித் தமிழ் நாட்டு மரபுக்கேற்ப எழுதப்பட்டுள்ளது. இத்தகைய கதைகளை மாணவர்கள் பயில்வாராயின், அப்பயிற்சி அவர் தாமே கவிணங்களைப் புனைதற்கு ஏதுவாகும் என்னும் குறிக்கோளுடன் இஃது எழுதப்பட்டது. இதனைத் தமிழ் உலகம் ஏற்று என்னை ஊக்குமாறு வேண்டுகிறேன்.

"அம்மை அப்பர் அகம்"
77, அவதானம்பாப்பையர் வீதி, சூளை, சென்னை.

பா. து. க.

பொருள் அடக்கம்

அமல நாதன்

1. அமல நாதன் புறப்பாடு

பால் காய்ச்சக் காய்ச்ச அதன் சுவை மிகுதிப் படுதல் போலவும், சங்கினைச் சுடச்சுட அது கருமை உறாதது போலவும், வாழ்வில் துன்பத்தை அனுப விக்க அனுபவிக்க அதன் முடிவு இன்பமாக மாறும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பொருட்டே நம் முன்னோர்கள் 'துன்பமுண்டேல் இன்பமுண்டு' என்று கூறிவந்தனர். அதற்கு எடுத்துக்காட்டாகவே இவ் வாழ்க்கை வரலாறு அமைந்தது எனில், அது மிகை யாகாது. இனி அந்த வரலாற்றைக் காண்போம்.

வெம்மை நிறைந்த வைகாசித் திங்களில் இன் றைக்குச் சற்றேறக் குறைய மூந்நூறு ஆண்டுகளுக்கு முன் பதினெட்டாண்டுக் காளை ஒருவன் தான் பிறந்த அகம்விட்டு ஒரு பெரியவரைக் காணப் புறப்பட்டான். பெரியவர் பெயர் ஆபத்சகாயர் என்பது. காளையின் பெயர் அமல நாதன் என்பது. இவன் இளைஞன் ஆத லின், தன்வாழ்வை நல்வழிப்படுத்துவதற்கு எவ்வெம் முறையில் நடந்து கொள்வது என்பதை அறிந்து கொள்ளவே, அப்பெரியாரைத் துணைக்கொண்டான். எவன் ஒருவன் பெரியவர்களது தொடர்பு கொள் கின்றானோ, அவன் கேடுறுவதில்லை. கீழ் நிலையில் உள்ளவனும் மேல்நிலை அடைதற்கு இதுவே காரணம்.

அரசனுக்கும் பெரியவர்கள் துணைவேண்டும் என்பதற் கன்றோ வள்ளுவர், பெரியாரைத் துணைக்கோடல் என் னும் அதிகாரத்தை அரசியல் பகுப்பில் அமைத்துக் கூறியுள்ளார். ஆகவே, பெருஞ்சிறப்புடைய பேர் அரசர்கட்கே பெரியார் துணைவேண்டுமேல், ஏனை யோர்க்கு வேண்டும் என்பதனை எடுத்து இயம்பவும் வேண்டுமோ ?

" தமமில் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள எல்லாம தலை"

என்னும், குறளே பெரியார் துணைக்கோடலின் சிறப் பினைத் தெரிவிப்பதாகும். அதாவது தம்மினும் அறிவாலும் வயதாலும் பெரியவர்களாய் இருப் பவரை உறவாகக் கொண்டு ஒழுகுவதே எல்லா வன்மைகளினும் தலை சிறந்த வன்மை என்பதாம்.

அமலநாதன் ஓர் அநாதைச் சிறுவன். அவன் தாயை இளமையிலே இழந்தவன் ; தந்தையாரைச் சமீபத்தில் பறி கொடுத்தவன். இவனுடன் பிறந் தவர் ஆணினும் இலர் ; பெண்ணினும் இலர். தாய் இன்மையால் அவன் சுவை இழந்தான் ; தந்தை இறந்ததால் கல்விச் செல்வமும் இழந்தனன். அமல நாதன் தந்தையார் பெருந்தன்மையான தொழில் எனப் பேருலகம் பேசும் ஆசிரியர் தொழிலை ஆவலாய் நடத்தியவர். அத்தொழிலையும் அவர் பட்டின வாச லில் பகட்டாய் நடத்த வாய்ப்பின்றிக் கிராம ஆசிரிய ராகவே கழிக்க நேர்ந்தது. அவருடைய நண்பரே ஆபத்சகாயர் என்பவர். அவருக்குத்தான் அமல நாதன் தந்தையாரின் குடும்ப வரலாறுகள் யாவும்

தெரிந்திருந்தன. எனவே, தந்தையை இழந்த தன யன் ஆபத்சகாயரின் அருந்துணையை நாடுவானுனன்; அவர் இல்லத்தை நோக்கிச் சென்றான். இவன் வரு கையையும் அவர் நோக்கியே இருந்தார். அமலநாதன் ஆபத்சகாயரைக் கண்டதும் இருவரும் கிராமத்தைக் கடந்து சிறிது தூரம் சென்றனர். இவர்கள் சென்ற வழியின் இருபக்கமும் தொடர்மலைகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. அவ்வழியில் ஒரு பாறையின் மீது அமர்ந்தனர்.

அப்போது ஆபத்சகாயர் தம் அருமை நண்பரின் திருக்குமாரனை அமலநாதனுக்கு நல்லுரை சில கூறலானார். அவை அவனது பிற்கால வாழ்விற்கு இன்றியமையாதனவாக இருந்தன. சிறுவன் கையில் ஒரு கடிதத்தை நீட்டி "சிறுவா ! இந்தக் கடிதத்துடன் நீ உன் உறவினர் ஒருவரைக் காண வேண்டும். இஃது உன் தந்தையார் கொடுத்த கடிதமாகும்; அவ்வுற வினர் உன் தந்தையாரின் இளைய சகோதரர். ஆகவே அவர் உன் சிற்றப்பன் ஆவார். அவர் பெயர் வன்கண் ணன் என்பது. அவர் நல்லூர் என்னும் இடத்தில் வாழ் பவர்," என்று கூறிமுடித்தார். வன்கண்ணர் என் னும் பெயரையும், நல்லூர் என்னும் இடத்தையும் கேட்டதும் இளைஞனுக்கு முகத்தில் ஓர் இன்பக் குறி மின்னல் போல் தோன்றி மறைந்தது. ஏனெனில், இளைஞன் சின்னஞ்சிறுவன். மேலும் பதினெட் டாண்டு நிரம்பப்பெற்ற காளை. ஆகவே, தான் உணர்ச்சி உடையவன் என்பதை ஒளிக்க இயலாது தான் இதுவரை யாரும் அற்ற அநாதி என்று நினைத் திருந்த எண்ணம் நீங்கிச் சிறிய தந்தையார் ஒருவர்

தனக்கும் இருப்பதை அறியவே, அவனுக்கு இன்பம் தோன்றியது. நல்லூர் என்னும் ஊர் மிகப் பழமை வாய்ந்தது; பெயர் வாய்ந்தது. ஆபத்சகாயர் அமல நாதனுக்கு வன்கண்ணன் குணநலங்களை மட்டும் குறிப்பிடவில்லை.

பிறகு சிறுவனிடம் சில பொருள்களை நல்கினர். அவற்றுள் இன்றியமையாது குறிப்பிடத் தக்கவை ஒரு சிறு பணப்பையும், ஒரு ரூபாய் நாணயமும் ஒரு தோத்திர நூலும் ஆகும். தோத்திர நூல் கடவுளை மறவாது இருத்தற்கு அறிகுறியாகவும், சிறு பணப்பை அமல நாதனின் தந்தையார் சேமித்து வைத்த தொகை இதுவே என்பதை உணர்த்துவதற்காகவும், ஒரு ரூபாய் நாணயம் வழிநடைச் செலவிற்கும் ஆகும். இம்மூன்று பொருள்களையும் ஆபத்சகாயர் அன்புடன் கொடுக்க அவற்றைப் பணிவுடன் ஏற்ற அமலநாதன் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு மேலே நடக்கலுற்றான்.

அமலநாதன் தன் பயணத்தை மேற்கொண்டான். இக்காலத்து வசதிகள்போல் இவன் காலத்தில் வண்டி வசதிகள் அவ்வளவு நல்லமுறையில் இல்லை. அப்படிப் போவதானாலும் மாட்டு வண்டி, கட்டை வண்டி, மூட்டை வண்டிகளில்தான் போகவேண்டும். அதற்குச் சிறு தொகையேனும் கட்டணமாகச் செலுத்த வேண்டும். அப்படிக் கட்டணமாகச் செலுத்திப் போகத் தகுந்த நிலையில் அமலநாதன் இல்லாமையால், பாதசாரியாகவே நடந்து சென்றான். செல்லாறு தோறும் எதிர் வந்தாரை வழி வினவிக் கொண்டே சென்றான். இவ்வாறு இரண்டு நாட்கள் நடந்து

குறிஞ்சிப்பாடியை அடைந்தான். அது மலையடிவாரம் ஒன்றில் இருந்த ஊர். அதையடுத்துத்தான் நல்லூர் என்னும் கிராமம் இருந்தது. இந்த இடத்தில் தான் இவனுடைய சிறிய தந்தையார் வாழ்ந்து வந்தார். இவன் அவர் வாழும் வீட்டையும் வீட்டிற்குரியவரையும் அறிய, இரண்டொருவரை விசாரித்தான். அவ் வழிப்போக்கர்கள் இவனை உற்றுஉற்று நோக்கினர். "ஏன் இவன் நல்லூரில் உள்ள வீட்டையும் வீட்டிற்குரியவரையும் விசாரிக்கின்றான்?" என்பதே அவர்களது விந்தையான பார்வைக்குக் காரணம். அவன் கேட்ட வீட்டகத்தவனையும் அந்த நல்லூரில் அறியாதவர் எவரும் இலர். அவ் வீட்டகத்தவன் சாப்பிட்ட கையாலும் காக்கையை ஓட்டாதவன். அப்படி ஓட்டினால் அக்கையில் உள்ள பருக்கை கீழே விழுந்து காக்கைக்கு உணவாகிவிடுமே என்னும் எண்ணமுடையவன். அதாவது அத்துணை உலோபி. தானும் வயிறார உண்ணமாட்டான்; அறம் செய்து புகழை நாடான்; உறவினர் துன்பத்தை ஒழிக்க மாட்டான்; வட்டிக்குப் பணம் கொடுப்பானே அன்றிச் சும்மா கொடுக்கமாட்டான்; பொருளோ பொருளோ என்று பேய்போல் அதைக் காத்துக்கொண் டிருப்பான்.

> உணானொள் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்
> துஞ்சானும் கேளிர் துயர்களையான்-கொன்னே
> வழங்கான் பொருள்காத் திருப்பானேல், ஆஅ
> இழந்தானென் றெண்ணப் படும்,

என்னும் நாலடிச் செய்யுட்கு இவனை ஓர் எடுத்துக் காட்டாக இயம்பலாம். ஆகவே, இச் சிறுவனது களங்கமற்ற முகத்தைக் கண்ணுற்றவர் இவன் ஏதோ

உதவிநாடி அங்குச் செல்ல விரும்புகிறான். அஃது அவனுக்கு ஏமாற்றமாக முடியும் என்று எண்ணிய வராய், "தம்பி நீ அங்குச் செல்லவேண்டா; சென்றால் உன் எண்ணம் நிறைவேறாது" என்றனர்.

என்றாலும், இளைஞன் தான்கொண்ட எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. ஒருவர் இல்லை யானாலும் வேறு ஒருவர் தம் சிறிய தந்தையாரைக் குறித்துச் சிறக்கப் பேசமாட்டாரோ என்று எண்ணி யவனாய் ஒரு நாவிதனைத் தன் எதிரில் கண்ணுற்றான். அவனை நல்லூர் கிராம வன்கண்ணரைப் பற்றி உசாவி னன். உடனே நாவிதன் "தம்பி, அவர் மனிதவடி வில்தான் இருக்கிறார் என்று சொல்லலாமே ஒழிய, செய்கையில் அரக்கர் என்றுதான் சொல்லவேண்டும். மறுமுறை அவரைப்பற்றி என்னைக் கேட்க வேண்டா"

'மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாமகண்ட தில்'

என்னும் குறளை இவ் வன்கண்ணரைப் போன்ற வரைக் கருதித்தான் வள்ளுவர் கூறினரோ என்று எண்ணவும் இடம் இருக்கிறது என்றனன். அமல நாதனுக்கு இன்னது செய்வதென்பது தெரியவில்லை. வழியில் வயது முதிர்ந்த கிழவி ஒருத்தியைக் கண் ணுற்றான். அவள் ஆயிரம் பிறைகண்ட ஆச்சி. ஆத லின் அவளுடைய கருத்தை அறிவோம் என்று எண் ணித் தன் வன்கணணரைப் பற்றிக் கேட்டதுதான் தாமதம். அவள் உடல் குலுங்கியது. "அந்தப் பாதகனைப்பற்றியா என்னைக் கேட்கிறாய்? அவன்

கொடியரினும் கொடியன். அந்தப் பாவி அதோ தெரிகிறதே அந்த வீட்டில்தான் வசிக்கிறான். அவன் நாசமாகப் போக," என்று திட்டும் வேகத்தில் வன் கண்ணன் வீட்டையும் காட்டிவிட்டனள். "அல்லன் போல் ஆவனவும் உண்டு சில," என்பது முதுமொழி யாதலின் கிழவியின் வெறுப்பால் சிற்றப்பன் வீட்டை அறிந்தான் அமலநாதன்.

இவ்வாறு பலரும் பலபடி தன் சிற்றப்பனது கொடூர குணத்தைக் குறித்துக் கூறக் கேட்ட அமல நாதனுக்கு மனத்தில் அச்சம் பிறந்துவிட்டது. ஆர்வ முடன் தன் சிற்றப்பனைக் காண இருந்த ஆசை அகத்தைவிட்டு அகன்றுவிட்டது. வந்தவழியே திரும் பிப்போகலாம் என்றுகூட எண்ணிவிட்டான். தான் தன் தந்தையாரின் நண்பரான ஆபத்சகாயரிடமே அடைக்கலம் புகுந்து "இனி நீரே அம்மை, அப்பன், ஐயன், அன்புடை மாமன், மாமி, ஒப்புடைய மாதர், ஒண்பொருள், குலம், சுற்றம், பொன், மணி என்று கூறி ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்ளலாம்," என் றும் தீர்மானம் கொண்டான்.

மீண்டும் தன் நிலையை எண்ணினன். தான் பதினெட்டாண்டு நிரம்பிய காளை என்பதும் இவனுக்கு நினைவுவந்தது. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? ஆகவே, நம்மை நாம் எப்படியும் காத்துப் பிழைத்துக் கொள்ள இயலும்," என்று தீர்மானித்த வனாய், "எதுவரினும் சரி; நாம் நாடிவந்த சிற்றப்பனைக் கண்டே திரும்புவோம்," என்று திடங்கொண்டு, தனக்கு எதிரே காட்டப்பட்ட வீட்டினருகு வந்துற் றான்.

அமலநாதன் வன்கண்ணன் வாசலை அடைந்த நேரம், கதிரவன் மேலைக்கடலில் விழுந்தநேரம். வன்கண்ணன் இல்லம் பரந்த வெளியில் இருந்தது. அங்கம் பக்கத்தில் வீடு நெருக்கமாக இல்லை. இவன் வீடு தனித்து இருந்தது. மேலும், அது முற்றும் முடிந்த கட்டடமாகக் காணப்படவில்லை. அரைகுறையாகவே இருந்தது. அந்த வீட்டை அடைய ஒழுங்கான பாதையும் கிடையாது.

வீடுகளில் மாலை நேரமானதும் விளக்கு வைத்தல் மரபு. ஆனால், அவ்வீட்டில் விளக்கே இல்லை. அதனோடு அவ்வீட்டில் மக்கள் நடமாடும் அறிகுறி எதுவும் காணப்படவில்லை. வீடும் சாத்தப்பட்டிருந்தது. வன்கண்ணன் வஞ்சகன், கபடன், ஆதலின், தன்னை வெளிப்படையாகக் காட்டி வாழ அஞ்சினன்.

நஞ்சுடைமை தான்அறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர்; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

என்பது உண்மையன்றோ? அதாவது நல்ல பாம்பு தன்னிடம் விஷம் இருப்பதால் வெளிப்படாமல் புற்றில் மறைந்தே வாழும். ஆனால், நீர்ப்பாம்பு தன்னிடம் விஷம் இன்மையால், வெளியே அஞ்சாமல் உலாவும். இப்படியே வஞ்சகர் தம்மை மறைத்தே வாழ்வர். கபடற்றவர் வெளிப்பட்டு வாழ்வர்.

இப்படிப்பட்ட வாழ்வுடையவன் வீட்டை அமலநாதன் அண்டிக் கதவைத் தட்டினன். நீண்ட நேரம் தட்டியும் அவனை ஏன் என்று கேட்பார் எவரும்

இலர். இவனும் இடைவிடாது தட்டிய வண்ணம் இருக்கவே, இவன் நின்ற இடத்திற்கு மேலே ஒரு பல கணிவழியே ஓர் உருவம் தலை நீட்டுவதைக் கண்டான். அவன் கையில் ஒரு துப்பாக்கியும் இருந்தது. அவ்வுருவம் வயது முதிர்ந்த கிழ உருவம். அக் கிழவனார் தலையைக் கண்ட சிறுவன், சிறிது பின் வந்து மேலே இருந்தவரை உற்று நோக்கி, "ஐயா, நான் ஒரு கடிதத்துடன் இவ்வில்லத்துக்குரியவரைக் காண வந்துள்ளேன். அவர் உள்ளே இருக்கின்றனரா?" என்று வினயமாகக் கேட்டான்.

கிழவனார் மேல் இருந்தபடியே அந்த இளைஞனைப் பார்த்து உரத்த குரலில் "அக்கடிதம் யாரால் கொடுக்கப் பட்டது?" என்று வினவினார். இளைஞன் அந்தக் கேள்விக்கு அஞ்சி நேர்விடை கொடுக்கவில்லை. தான் கொண்டுவந்த கடிதத்தை உரியவருக்குக் கொடுத்து அவர் கேட்டக்கால் இன்னாரிடமிருந்து கொண்டுவந்ததாகக் கூறவியலும் என்று பதில் அளித்தான். "அப்படியானால் உன் பெயர் யாது?" என்ற வினா மேலே இருந்து வந்தது. அதற்கு விடை கூறத் தயங்காமல், தன் பெயர், அமல நாதன் என்று அஞ்சாது அறிவித்தான். இப்பெயரைக் கேட்ட விருத்தன் சிறிது மனம் தடுமாறித் திடுக்கிட்டு "உன் தந்தை உயிருடன் இருக்கின்றாரா? அன்றி இறந்துவிட்டாரா?" என்று கேட்டனன். "அவர் இறந்துவிட்டார்," என்று இளைஞன் பதில் கூறினான். அதன் பின்னர் வீட்டிற்குரிய கிழவனாகிய வன்கண்ணன் கதவைத்திறக்க மாடியினின்று கீழே இறங்கி வந்தனன்.

2. சிற்றப்பன் சந்திப்பு

வன்கண்ணன் கீழ் இறங்கிக் கதவைத் திறப்பதற்குத் தாமதம் ஆயிற்று. கதவு அவ்வளவு பாதுகாவலுடன் மூடப்பட்டிருந்தது. முழுமையும் திறக்கப்படவில்லை. சிறிதே திறக்கப்பட்டது. இளைஞன் உள் நுழைந்ததும் உடனே கதவு மூடப்பட்டது. கிழவன் இளைஞனைச் சமையல் அறையில் புகுமாறு பணித்துத் தான் சிறிது நேரத்திற்கெல்லாம் வருவதாகக் கூறி அனுப்பினான்.

சமையல் அறை விசாலமாக இருந்தது. தீயும் எரிந்து கொண்டிருந்தது. அவ்வளவு பரந்த அறைக்கேற்ற சமைக்கும் பொருள்கள் அங்குக் காட்சி அளிக்கவில்லை. சில கோப்பைகளும், உண் பொருள்களுமே காணப்பட்டன. ஆனால், சுவர்களைச் சார்ந்து பல அலமாரிகள் இருந்தன. அவை யாவும் பெரிய பூட்டுகள் இடப்பட்டு மூடப்பட்டிருந்தன. அறைக்கு இடையே ஒரு மேசை போடப்பட்டிருந்தது. அதற்குமேல் ஒரு பாத்திரத்தில் களி சமைத்து வைக்கப்பட்டிருந்தது. ஒரு கரண்டியும் காணப்பட்டது. ஒரு கோப்பையில் திராட்சைரசம் நிரப்பப்பட்டும் இருந்தது.

இவற்றையெல்லாம் மிகுந்த ஆச்சரியத்தோடு அமலநாதன் பார்த்துக்கொண்டே இருக்கையில், வன்கண்ணன் உள்ளே நுழைந்தான். அவனது தோற்றம் இளைஞனுக்குப் பிடிக்கவில்லை. அவனைப்பற்றித் தாழ்வாக எண்ணிவிட்டான். ஊர் மக்கள் உரைத்தது உண்மை என்பது அப்போதுதான் அவனுக்குப்

புலனாயிற்று. அக்கிழவன் வளர்ந்த உடலும் மாசேறிய ஆடையும் கொண்டிருந்தான். அமலநாதனுக்கு ஐயமும் உள்ளத்தில் பிறந்தது. இவன் ஒரு வேளை இவ்வீட்டுப் பணியாளனாக இருக்கலாமோ என்றுகூட எண்ணி விட்டான். கடைசியில் இந்த அலங்கோல மனிதன் தன் இளைய தந்தை என்பதும், அந்த வீட்டுக்குரிய தலைவன் என்பதும் அறிந்து ஆச்சரியப்பட்டான். தான் கொணர்ந்த கடிதத்தை அவ் விசித்திர மனிதனிடம் நீட்டினான். கடிதம் காட்டினால் தனக்கு நன்மை ஏற்படும் என்று இருந்த எண்ணம் இவன் மனத்திலிருந்து வெளியேறிவிட்டது. தன் சிறிய தந்தையை அறிந்து இக்கடிதம் கொடுக்கப் பெற்றோமே என்னும் மகிழ்ச்சி ஒரு சிறிதும் அவன் முகத்தில் தோன்றவில்லை.

கொடூர சொரூபி அக்கடிதத்தைப் பிரித்து வாசித்தான். அதில் உள்ளடங்கிய பொருளைச் சிறியவன் உணர்ந்திருப்பானோ என்று சந்தேகித்தான். சிறுவன் உள்ளத்தில் செல்வத்தில் பங்கு கிடைக்கும் என்னும் எண்ணம் பதிந்து இருக்குமோ என்று அறிந்துகொள்ள அக்கிழவன் அவாவினான். ஆகவே, இளங்காளையை நோக்கி, "நீ ஏதேனும் என்னிடம் இருந்து சொத்து, சுதந்தரங்களைப் பெற எண்ணியுள்ளாயோ?" என்றும் உசாவினான். சிறுவன் சிறிதும் அஞ்சாது அசட்டையாக 'நான் அந்த எண்ணம் கொண்டே இங்கு வந்தேன். என்றாலும், என் சிறிய தந்தையார் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை என்று கூறினால், அதனை அவ்வாறே விட்டுக் கொடுத்து இப்பொழுதே வெளியேறவும் சித்தமாகக்

காத்துக் கொண்டிருக்கிறேன்,' என்றான். செல்வம் உள்ள காலத்துப் பணிவாகவும் வறுமை உள்ள காலத்துத் தாழ்ந்து தன் மானத்தைக் குறைத்துக் கொள்ளாமலும் ஒருவன் வாழ வேண்டும் எனக் கூறும் "பெருக்கத்து வேண்டும் பணிவு; சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு." என்னும் உண்மையைச் சிறுவன் அத்தருணத்தில் நிலைநாட்டினன்.

கிழவன் விழித்துக்கொண்டான். சிறுவனது மனத்துணிவைப் பற்றிச் சிறிது எண்ணினன். சிறுவனைச் சிறிது சாந்தப்படுத்தி உணவு அருந்த அழைத்தான். உணவு ஒருவருக்கே அங்குத் தயாராக இருந்தது. அந்த உணவையே இருகூறாக்கி ஒன்று அமலநாதனுக்கு அளித்தான். இளைஞனைக் குறித்து அவனுக்கு நெஞ்சில் அச்சம் குடிகொண்டது. சாப்பிட்டுக் கொண்டே இளைஞன் வாய்மூலம் தன் அண்ணன் இறந்த விதத்தை அறிந்துகொண்டான். தனக்கும் தன் அண்ணனுக்கும் உள்ள அந்தரங்க உறவுபற்றி இளைஞன் ஏதும் அறியாதவன் என்பதையும் ஒருவாறு ஊகித்துக் கொண்டான். இருவரும் உணவு கொண்ட பின், இளைஞனைச் சிரமம் தீர உறங்குமாறு பணித்தான்.

அமலநாதனுக்கு எங்குப் படுத்து உறங்குவது என்பது தெரியவில்லை. வீடு முழுவதும் இருள் குடிகொண்டிருந்தது. வழிநாடிப் படுக்கும் இடம் செல்ல, ஒரு விளக்கு தருமாறு தன் சிற்றப்பனை வேண்டினன். அவன் விளக்குத்தர மறுத்து விட்டனன். வேறு வழி இன்மையால் கையால் வழிதடவி ஓர்

அறையை அடைந்தான். படுக்கப் பாயும் இல்லை; மெத்தையும் இல்லை. கீழே தரையில் படுத்துக் கொண்டான். நடந்து வந்த களைப்பாதலால் படுத்ததும் உறங்கிவிட்டான். "பசி ருசி யறியாது, நித்திரை சுகம் அறியாது," என்பது பழமொழியல்லவா? தலையணை, படுக்கை யாதொன்றும் இன்றியும் நன்கு உறங்கிவிட்டான். இளைஞன் அறையில் நுழைந்து படுத்து உறங்கியதும் கிழவன் இனித் தான் எச்சரிக்கையாக இருப்பதற்காகப் பற்பல யோசனைகள் செய்யலானான்.

இளைஞன் அதிகாலையில் எழுந்தான். கதவு தாளிடப் பட்டிருந்தமையால் தட்டினான். கிழவன் கதவைத் திறக்க இருவரும் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, காலை உணவு அருந்தச் சமையல் அறையை அடைந்தனர். அங்கு இரு பாத்திரங்களில் களியுணவு, தயாராக வைக்கப்பட்டிருந்தது. கிழவனுக்குச் சிறிது உதாரகுணம் ஓங்கித் தனக்கென வைத்துக் கொண்டிருந்த பானத்தில் சிறிது தன் அண்ணன் மகனுக்கு அளித்தான்.

"விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று" என்று கூறும்போது விருந்து அகத்ததா இருக்கையில் அமுதமே ஆயினும் அருந்தலாமோ? மருந்தே ஆயினும் விருந்தோடன்றோ உண்ணவேண்டும்? தன் உள்ளத்தில் சீற்றம் இருப்பினும் உணர்வில் சிறிது உதாரகுணமுடையவனாகவே கிழவன் நடந்துகொண்டான்.

இருவரும் காலை உணவை முடித்துக்கொண்டனர். கிழவன் தன் வழக்கப்படி சுருட்டு ஒன்றைப் பிடித்துக் கொண்டு இளைஞனோடு உரையாடத் தொடங்கினான். அவ்விளைஞன் அறிந்தவரையில் பெற்றோரைப்பற்றி ஏதேனும் தெரியவருமோ,என்று சாராயம் வார்த்துப் பூராயம் கேட்பதுபோல் கேட்கத் தொடங்கினான். இப்படிக் கேட்பதிலிருந்து தன்னைப் பற்றி வேறுவிதமாக நினையாதிருக்கும் பொருட்டுத் தன் முகத்தில் மகிழ்வுக் குறி காட்டிக்கொண்டே கேட்கத் தொடங்கியது அவ்வன்கண்ணனது உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் நயவஞ்சகக் குணத்தை மேலும் வெளியாக்கியதாகும். இளைஞன் தன் மனத்தில் ஏதோ ஒரு தீய எண்ணம் வைத்துக் கொண்டுதான் அங்கு வந்தாக எண்ணினான். தனக்கு அக்கிழவனோடு உரையாட மனம் இல்லாதவனாய்த் தான் படுத்திருந்த அறையைச் சுத்தம் செய்ய உத்தரவு கொடுக்கத் தன் சிற்றப்பனை வேண்டினான். இதற்கு நேரிய விடை அளிக்காமல் கிழவன், அவ் வீடு தனக்கு உரியது ஆதலின், அதைப் பற்றிப் பிறர் ஒன்றும் கவலைப்படவேண்டியதில்லை என்று கூறி மேலும் அவனுடைய குடும்பத்தைப் பற்றி விசாரிக்கலானான்.

இளங்கன்று பயமறியாது அன்றோ? மேலும் இளைஞர் குறும்பிலும் பேர் போனவர்கள். தன் சிற்றப்பனது சீற்றத்தை மேலும் தூண்டச் "சிறிய தந்தையீர்! வழியில் உம்மைப்பற்றி ஒரு கிழவியைக் கேட்டபோது அவள் மிகவும் வைது வசை பாடினாள். அவள் அவ்

வாறு உம்மை வெறுப்பதற்குக் காரணம் என்னவோ" என்று கேட்டான். இதைக் கேட்டதும் வன்கண்ணன் முகத்தில் கோபம் தாண்டவம் ஆடியது. ஆம்! அவள் எப்பொழுதும் என்னைப்பற்றிப் பிறரிடம் இழிவாகத் தான் பேசி வருகின்றாள். அவளை நீதிபதியிடத்தில் கூறி அடக்கினால் அன்றி அடங்கமாட்டாள். அவள் என்னைக் கிள்ளுக்கீரையாக எண்ணி இருக்கிறாள். கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி போலும். இதோ புறப்படுகிறேன்" என்று கூறிக் கொண்டே தன் தலைப்பாகையையும் மேல் அங்கி யையும் தரித்துக்கொண்டு புறப்பட்டான். ஆனால், திடுமெனத் தன் பயணத்தை நிறுத்திக்கொண்டான். இளைஞனை வீட்டில் தனியே விட்டுச் செல்ல அவனுக்கு விருப்பமில்லை. அவ்வாறு விட்டுச் சென்றால் தன்குட்டு வெளியாகிப் போகும் என்பது அவ் விருத்தன் எண்ணம். சிறிது நேரம் சிந்தித்து இளைஞனைப் பார்த்து, சிறிதும் இரக்கம் இன்றி "நான் வெளிச் சென்று திரும்பியதும் நீ உள்ளே வா; நான் யாரையும் வீட்டில் விட்டுச் செல்வதில்லை," என்று தன் உள்ளக்கிடக்கை யை ஒளிக்காமல் கூறினான். அந்த வார்த்தைகள் இளை ஞனைச் சித்திரவதை செய்வதுபோல இருந்தன. தன் நெருங்கிய உறவினரே தன்னை நம்பவில்லை என்றால், பிறர் யார் தன்னை நம்புவர் என்று எண்ணி மனம் புழுங்கினான். தான் அப்படி நம்பப்படாத நிலையில் இருப்பதனால் தானே வெளியேறச் சித்தமாக இருப் பதை அறிவித்தான். அப்போதுதான் கிழவனுக்குத் தான் கூறியது தவறு என்பது பட்டது. தான் வெளியே சென்று நீதிபதியைக் கண்டு மீள்வதை

நிறுத்திக்கொண்டான். இதனல் இருவரும் வெளி யேற்றுவது நின்றுவிட்டது.

அமலநாதன் அவ்வகத்தில் தங்கத்தங்கத் தன் சிற்றப்பனின் குணத்தை மேலும் மேலும் அறிய வழி ஏற்பட்டது. தன் சிற்றப்பன் பேச்சிலிருந்து அவன் மீது விருப்புக்கொள்வது விடுத்து வெறுப்புக்கொள்ள லானன். அவன்பால் அச்சமும் குடிகொள்ளலாயிற்று. வீட்டில் வேறு வேலை ஒன்றும் இல்லாமையால் பேச்சுக்களே நடந்து வந்தன. அமலநாதன் தன் தந்தையாரும் சிற்றப்பனும் இரட்டைப் பிள்ளையாகப் பிறந்தவர்களோ என்று வினவினன். அந்த வின சிறுவனைச் சிறிது பிரமிக்கச் செய்தது. கோபமும் வரச் செய்தது. ஆனல் கோபத்தை வெளிக்குக் காட்டாமல் அடக்கிக் கொண்டனன். அவ்விளைஞன் விடுத்த வினவிற்கு விடையும் கொடுத்திலன். ஆனல் சிறுவன் பேசாமல் இல்லை. உங்கள் இருவரில் என் தந்தையார் முதியவரோ? என்று வினவினன். அத்துடன் நிற்காது, "என் தந்தையார் தம் இளைய சகோதரனல் சொத்து சுதந்திரங்களில் மோசம் செய்யப்பட் டாரோ," என்றும் கேட்டனன்.

அவ்வாறு சிறுவன் கேள்விமேல் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்ததும், இனியும் தான் சும்மா இருத் தல் கூடாது என்று தன் வெறுப்புக் குறியை முகத் தில் காட்டாது விருப்புக் குறியைக் காட்டித் தான் ஒரு சிறு தொகையைக் கொடுப்பதாகத் தன் அண்ண னுக்கு வாக்களித்ததையும் கூறினன். அதனல் சட்ட விதிப்படி தனக்குச் சொத்து சேர வேண்டுமென

அமலநாதன் கேட்க வேண்டிய நியதி இல்லை என்றும் குறித்தான். இவ்வாறு தான் சேமித்து வைத்த தொகை 600 ரூபாய் என்றும் குறிப்பிட்டான்.

இவ்வாறு தனக்கு 600 ரூபாய் சேமித்து வைத்தும் கொடுக்க எண்ணி இருப்பதாகக் கூறக்கேட்ட அமல நாதன் அதனுல் மகிழ்ச்சி ஒன்றும் கொண்டிலன். தன் சிற்றப்பன் ஆதிமுதல் அந்தம்வரை பொய் புகலு கிருன் என்று உணர்ந்துகொண்டான். என்ருலும், சிற்றப்பன் ஒருபையில் இட்டு அளித்த தொகையை வெகு அமைதியாகப் பெற்றுக்கொண்டு நன்றி செலுத்தினுன்.

பிறகு வன்கண்ணன் தன் அண்ணன் மகனை அமலநாதனைப் பார்த்து ' நீ மேலே சென்று, அறை யில் உள்ள பெட்டியைக் கொண்டுவா. அதில் பல பத்திரங்களும் கடிதங்களும் உள்ளன. அவை உனக் குப் பயன்படக்கூடிய கடிதங்களாகும் என்று கட்டளையிட்டனன். வீடு இருள் அடைந்த வீடு என்பது முன்பே கூறப்பட்டது.

இந்நிலையில் மேலே சென்று பெட்டியைக் கொணர வேண்டுமானுல் விளக்கின் உதவி பெரிதும் தேவையாக இருந்தது. ஆகவே, தான் மேலே சென்று பெட்டியைக் கொணர விளக்கு ஒன்றைத் தருமாறு தன் சிற்றப்பனை வேண்டினுன். இவன் வேண்டிய வாறு விளக்கு அளிக்கப்படவில்லை. ஆனுல், மேலே செல்வதற்குரிய வழி வகைகள் மட்டும் இன்ன என்பன கூறப்பட்டன. அந்தக்குறியின் வழியே அமலநாதன் மாடியை நாடி மேலே செல்லப் புறப்பட்டான்.

வன்கண்ணன் இல்லம் மிக உயர்ந்து ஐந்து நிலையுடையது. அவற்றின் படிகள் ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் இடைவெளி யுடையனவாய் அமைந்திருந்தன. மேலே ஏறிச் செல்கையில் சிறிது அஜாக்கிரதையாக இருப்பினும் ஆபத்து நேர்ந்துவிடும். படிகளின் பக்கவாட்டத்திலும் யாதொரு பாதுகாப்பும் இல்லை. இந்த நிலையில் அமலநாதன் மாடிமீது ஏறத் தொடங்கினான். அப்போது காற்றும் வேகமாக அடித்துக்கொண்டிருந்தது. பாவம் சிறுவன் சுவர் ஓரமாக வெகு எச்சரிக்கையோடு தன் சிற்றப்பனின் சொல்லுக்கு இணங்கி மேலே ஏறத்தொடங்கினான். அவன் ஏறிச்செல்கையில் இடையில் ஒரு படி குறுக்கிட்டது. அப் படி பொய்ப்படி. அதற்கு நேர் கீழே ஒரு கிணறு இருந்தது. அதில் தப்பித்தவறி அமலநாதன் காலை வைத்திருந்தால் அப் படி முறிந்து இவன் கிணற்றில் தான் விழவேண்டும். தெய்வாதீனமாக இவன் அவ்வாபத்தினின்றும் தப்பித்துக் கொண்டான். இது தன்னைக் கொல்வதற்காகத் தன் சிற்றப்பன் செய்த சூழ்ச்சி யென்பதை அவன் உணர்ந்து கொண்டான். தன் சிற்றப்பன்மீது அடக்கமுடியாத ஆத்திரம் கொண்டான். என்றாலும், "பொறுத்தவர் பூமியாள்வார்" என்று எண்ணங் கொண்டவனாய்க் கோபத்தை அடக்கிக்கொண்டான். இது தான் அறிவுடைமை. திருவள்ளுவரும் "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க, சீர்த்த இடத்து," என்று கூறியிருக்கிறார் அல்லவா? அதாவது அடங்கிப்போக வேண்டிய இடத்துக் கொக்கு எப்படி நீர் நிலைகளில் சாந்தமாக அமர்ந்திருந்து தனக்குத் தகுந்த ஆகார

மாகிய பெரிய மீன் வரும்போது குத்திக் கொன்று தனக்கு ஆகாரமாக ஆக்கிக் கொள்கிறதோ, அது போல அடங்கி இருக்கவேண்டிய இடத்து அடக்கமாக இருந்து, காலமும் இடமும் தக்கபடி அமைந்த போது எதிரியை வெல்லவேண்டும் என்பதல்லவா?

அமலநாதன் மேல்மாடியை அடைந்து குறிப்பிட்ட பெட்டகத்தை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினன். வரும்போது வெகு எச்சரிக்கையாக வந்தமையால், யாதோர் ஆபத்துக்கும் உள்ளாகாமல் வந்து இறங்கினன். சிற்றப்பன் நாற்காலியில் அமரிக்கையாக அமர்ந்து இருந்தான் என்றாலும், அவனது முகத்தில் மட்டும் பயங்கரமான குறிப்புகள் தோற்றம் அளித்து நின்றன. தன்னை அடுத்த பொருளைக் கண்ணாடி காட்டுவது போல் அகத்து அழகை முகம் காட்டிவிடும் அல்லவா? "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்பது பொய்யா மொழியன்றோ?

அமலநாதனும் குறும்புக்காரன். அவன் தன் சிற்றப்பனுக்குப் பின்னல் வருவதைக் காணுமையாலும், வன்கண்ணன் ஏதேதோ நினைத்துக் கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் இருந்தமையாலும் இளைஞன் திடுமெனக் தட்டியவுடன் சிற்றப்பன் தரையில் குப்புற விழுந்தான். விழுந்தவன் எழவும் இயலாமல் அப்படியே மெய்மயங்கிக் கிடந்தான். இளைஞன் தன் சிற்றப்பனுக்கு மூச்சு இருக்கிறதோ இல்லையோ என்பதை அறிய மார்பில் கையை வைத்துப் பார்த்தான். அமலநாதன் திடுக்கிடும் நிலையில்

ஒரு கத்தி அங்கு மறைவாக வைக்கப்பட்டிருந்தது. சிறிது நேரம் கழித்து வன்கண்ணன் தன் சுவாதீனத்திற்கு வந்தான். வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற்போலத் தன் சிற்றப்பனை நோக்கி, "நீ ஏன் என்னைக் கொல்ல முயற்சி செய்கிறாய்?" என்று வினவினான்! இந்த வினாவைச் சிறுவன் எழுப்பக் கேட்ட வன்கண்ணன் திடுக்கிட்டுப் போனான். "தான் அப்போது மிகுந்த களைப்பாக இருப்பதால் ஒன்றும் உரையாடற்கில்லை என்றும் அடுத்த நாள் எதுவும், பேசிக் கொள்வோம்," என்றும் கூறிச் சும்மா இருந்தான்.

3. கப்பல் வாழ்க்கை

அடுத்த நாள் காலையில் அமலநாதன் படுக்கையை விட்டு எழுந்தான். தன் சிற்றப்பனைத் தனக்குக் கீழ்ப்படியும் நிலையில் கொண்டு வந்து விட்டதாகப் பகல் கனவு கண்டான். இனித் தன் சிற்றப்பனால் யாதொரு தீங்கும் செய்ய முடியாத நிலையில் முழுச் சுதந்தரத்துடனும், முழு சௌகரியங்களுடனும் இனிது வாழலாம் என்று ஆகாயக் கோட்டை கட்டினான். காலை உணவும் அருந்தப்பட்டது. இந்நிலையில் பார்க்க ஒவ்வாத கந்தையணிந்த பரிதாபத் தோற்றமுடைய ஒருவன் கதவினைத் தட்டிக் கொண்டு கையில் ஒரு கடிதத்துடன் வந்து நின்றான். இவன் ஒரு சிற்றாள்; கப்பல் தலைவனிடம் வேலை செய்பவன். அவன் தன் பெயர் மாரியப்பன் என்பதையும் தான் தன் எஜமானன் வங்கநாதனிடமிருந்து கடிதம் கொண்டு வந்ததாகவும் கூறினான்.

மாரியப்பன் கொண்டுவந்த கடிதத்தை வன்கண்ணன் வாசித்தனன். அதில் யாதொரு ரகசியமும் இல்லாததனால் அதனை அமலநாதனை வாசிக்குமாறு கொடுத்தனன். அமலநாதன் வாசித்ததில் தன் சிற்றப்பனுக்கு வெளியே சென்று வரவேண்டிய வேலை இருப்பதையும் உணர்ந்து கொண்டான். மேலும் அக்கடிதத்தில் வங்கநாதன் அன்றே துறைமுகத்தை விட்டுத் தன் கடற்பயணத்தை மேற்கொள்ள வேண்டி இருப்பதால், தான் தன் நண்பனை வன்கண்ணனுக்கு எந்த உதவியை வேண்டுமானாலும் செய்து தருவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதையும் உணர்ந்துகொண்டான்.

வன்கண்ணன் தான் தன் நண்பனை வங்கநாதனைக் காண வெளியே செல்லும் போது அமலநாதனையும் உடன் அழைத்துக்கொண்டு வழக்கறிஞர் ஒருவரிடம் சென்று அவ்வழக்கறிஞர்மூலம் அமலநாதனுக்கு இருந்த ஐயம் அனைத்தையும் விளக்குவதாகக் கூறினன். அமலநாதனும் அதற்குச் சம்மதித்தான். தன்னை நடுவீதியில் எத்தகைய கொடிய தந்திரங்களைச் செய்து துன்புறுத்தவும் தன் சிற்றப்பனால் இயலாது என்பதையும் உணர்ந்தான் அமலநாதன்.

இருவரும் வெளிக்கிளம்பிக் கப்பற் றுறைமுகத்தை நாடிச் சென்றனர். அங்குத்தான் வழக்கறிஞர் திரு. நல்லறிஞப்பிள்ளை இருப்பதாக அமலநாதனுக்குக் கூறி, வன்கண்ணன் அழைத்துச் சென்றான்.

முன்னே வன்கண்ணன் சென்று கொண்டிருக்க, பின்னே மாரியப்பனும் அமலநாதனும் உரையாடிக் கொண்டு தொடர்ந்து வந்துகொண்டே இருந்தனர்.

மாரியப்பன் தன் வாழ்க்கையின் துன்பங்களை எல்லாம் அமலநாதனுக்குக் கூறிக்கொண்டே வந்தான். தான் இளைஞனாக இருக்கும்போதே தூக்கிச் செல்லப்பட்டுக் கப்பலில் தொழில்புரியுமாறு வற்புறுத்தப்பட்டதையும் தான் இதுவரை தன் பெற்றோர்கள் யார் என்பதை யும் தன் வயது இவ்வளவு என்பதையும் அறியாத நிலையில் வாழ்க்கையை நடத்துவதாகவும் கூறினான். இதனோடு தான் தனது குடிகார விலங்குத் தன்மை வாய்ந்த எசமானன் கையாலும் மற்றுமுள்ள மீகாமன் களின் கையாலும் வாங்கிய அடிகளின் அடையாளத் தையும் காட்டினான். மேலும், தான் வேலைசெய்யும் கப்பலானது ஆங்கு ஆங்குச் சென்று இளம் பிள்ளை களைப் பெற்றோரும் மற்றோரும் அறியாத நிலையில் தூக்கிக் கொண்டு வந்து, வெளிநாடுகளில் காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம், ரப்பர்த் தோட்டங் களில் வேலை பார்க்க விட்டு வருவதையும் கூறினான். இவற்றை யெல்லாம் கேட்ட அமலநாதன் தன் உள் ளத்தில் ஒரு புறம் அச்சமும் மற்றொரு புறம் மாரியப் பனது நிலையைக் குறித்து இரக்கமும் கொண்டான். தன்னையும் கப்பல்காரர்கள் தூக்கிக் கொண்டு போய் விடுவார்களோ என்றும் பயந்தவனாய்த் தன் சிற்றப்பனுடன் சென்று துறைமுகத்தை அணுகியதும், தான் எந்தக் காரணம் கொண்டும் கப்பலில் செல்ல இய லாது என்பதை விநயமாகத் தெரிவித்துக் கொண் டான். வன்கண்ணன் ஒன்றும் கூறாது சும்மா இருந் தான்.

மூவரும் போகும் வழியில் இருந்த ஒரு விடுதியில் புகுந்தனர். அவ்விடுதியில் மாடியில் ஓர் அறையில்

வன் கண்ணனது நண்பர் வங்கநாதன் தங்கி இருந்தார். வங்கநாதனை அமலநாதனும் கண்ணுற்றான். வங்க நாதன் உயரிய தோற்றமும் சாம்பல் நிறமும் உடையவனாய் விளங்கினான். சிற்றப்பனவன் கண்ணன் தன் அண்ணன் மகனைக் கீழே போய் இருக்கச்சொன்னான். இதற்குள் சிறிது நேரம் தன் நண்பனிடம் பேசிவிட்டு வந்து விடுவதாகவும் அறிவித்ததும் அமலநாதன் தன் சிற்றப்பனது வார்த்தைகளில் யாதோர் ஐயமும் கொள்ளாமல் அவ்வாறே கீழே இறங்கிப் போனான்.

அந்த விடுதி பல கப்பல் பணியாளர்களின் கூட்டத்தை மிகுதியாகக் கொண்டிருந்தது. அவ்வங்கத் தொழிலாளர்கள் யாவரும் கொடூரமான தோற்றமும், மனவன்மையை வெளியிடுவார் போன்ற உடல் வன்மையும் உடையவராய் இருந்தனர். அவர்களைக் காணவும், அவர்களோடு உரையாடவும், அமலநாதன் விரும்பவில்லை. தன்னை ஒத்த இளைஞனை மாரியப்பனோடு பேசிக்கொண்டு தன் சிற்றப்பன் வரும்வரை காலங்கழிக்க எண்ணினான். இனம் இனத்தையன்றோ நாடும்! ஆகவே, மாரியப்பனோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தான். பாவம்! மாரியப்பன் எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்க முடியும்! அவன் அடிக்கடி தன் எஜமானன் ஏவும் ஏவலையும் மற்றும் உள்ள மானுஷிகன் இடும் பணியையும் புரிய வேண்டியவனாய் இருந்தமையால், அவன் அமலநாதனோடு நீண்ட நேரம் இருக்க இயலவில்லை.

அமலநாதன் விடுதிக்குரிய உரிமையாளரோடு வார்த்தையாடப் புகுந்தான். விடுதியாளரும் இளைஞ

னது களங்கமற்ற உள்ளத்தை அறிந்து அவனோடு உரையாட வெறுப்புக் கொள்ளவில்லை. அமலநாதன் இளைஞனயினும் காரியமே கண்ணனவன். விடுதி யாளரை நோக்கி, "உமக்கு வழக்கறிஞர் திரு நல்லறிஞப் பிள்ளையைத் தெரியுமோ?" என்று வினவி னன். அவ்விடுதியாளர் திரு. பிள்ளையவர்கள் மிகவும் நேர்மையானவர் என்பதையும் எத்தகைய சிக்கலான வழக்குகளையும் ஒழுங்காகவும், முறையாகவும், நீதியி னின்றும் தவருதநிலையிலும் தீர்த்து, வென்றுகொடுக் கும் சமர்த்தர் என்பதையும் அறிவித்தார். ஏதோ தெய் வத் தவக் குறிப்பால் இளைஞனை இரக்கத்தோடு விடு திக்குரியவர் உற்று நோக்கி, 'நீ வன்கண்ணனுக்கு உறவினனே?' என்று வினவினர். அமலநாதன் 'ஆம்' என்று கூறி "வன்கண்ணனுக்கு இந்த வட்டாரத்தி லேயே நற்பெயர் இல்லை போல இருக்கிறதே! அஃது உண்மைதானே?" என்று உசாவினன். விடுதியாளர் 'தம்பி, இதில் என்ன மறைவிடம் இருக்கிறது? இஃது இந்த வட்டாரம் அறிந்த உண்மை. அவனை இளைஞர் முதல் முதியவர் வரை எவரும் விரும்புவதில்லை. இவ்வாறு இவ் வன்கண்ணன் வெறுக்கப்படுதற்குக் காரணம் தன் அண்ணன் மகனை எவ்வாறேனும் கொன்று அம்மகனுக்குரிய சொத்து, சுதந்திரங்களை இவன் அபகரித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியிருப்பதே" என்றும் விளக்கமாகக் கூறினர்.

அமலநாதன் இதுவரை கொண்டிருந்த ஐயங் கள் எல்லாம் தெளிவுபடலாயின; தன்னிடம் எவ்வெவ் வாறு தன் சிற்றப்பன் இதுவரை நடந்து வருகிறன் என்பதையும் விடுதியாளனுக்கு உணர்த்தினன். அமல

நாதன் தான் தான் சொத்துக்கு உரியவன் என்பதையும் தன் சிற்றப்பன் அதனை வஞ்சித்துக் கவர்ந்து கொண்டான் என்பதையும் அறிந்து கொண்டான். தனக்கு இனி வரப் போகின்ற சொத்தைக் குறித்துப் பெரிய பெரிய எண்ணங் கொள்ளலானான். தான் இனி ஒரு பெரிய கௌரவமான மனிதன் என்பதையும், சொத்துக்கு உரிய சொந்தக்காரன் என்பதையும், எண்ணி எண்ணி இன்புற்றான். அமலநாதனும், விடுதியாளனும் பேசி முடிவதற்கும் வன்கண்ணன் கீழே இறங்கி வருவதற்கும் காக்கை ஏறப் பனம் பழம் விழுந்தாற்போலச் சரியாக இருந்தது.

வன்கண்ணனும் கப்பல் தலைவன் வங்கநாதனும் மாடியை விட்டுக் கீழே இறங்கினர். இருவரும் வெளியே கிளம்பினர். இவர்களோடு அமலநாதனும் புறப்பட்டான். வன்கண்ணனும், வங்கநாதனும் முன் கூட்டியே சில ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருப்பர் ஆதலின், இளைஞனோடு வங்கநாதன் உரையாடத் தொடங்கி வழியைக் கடக்க முற்பட்டான். வங்கநாதன், இளைஞனைச் சிற்றப்பன் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும், அவ்வன்கண்ணனுடன் தான் இளமைமுதற் பழகியதால் அவன் கொடுமையானவன், வஞ்சகன் என்பதை அறிந்திருப்பதாகவும், தானே தன் படகில் ஏற்றிக் கொண்டு, துறைமுகத்திற்கு அப்பால் உள்ள வழக்கறிஞர் நல்லறிஞப்பிள்ளையிடம் அழைத்துப் போவதாகவும், கூறிக்கொண்டே வந்தான். இந்தப் பசப்பு வார்த்தைகள் அமலநாதனை மயக்கிவிட்டன. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் அல்லவா?

அமலநாதன் வங்கநாதனை முற்றிலும் நம்பிவிட்டான். கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும் அன்றோ?

வங்கநாதன் துறைமுகத்தை அடைந்தான். அங்கு வன்கண்ணன் அகப்படவில்லை. சிறுவன் கப்பலின் மேல் தட்டில் கொண்டுபோகப்பட்டான். இங்கும் அங்கும் கப்பல் தட்டில் சுற்றிப்பார்த்து, பயங்கரக் குரலில் "ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்! பேர் ஆபத்து; பேர் ஆபத்து!" என்று கூக்குரல் இட்டு அலறினான் அமலநாதன். அதன் பயனாக ஒரு மாலுமி ஓடிவந்து அவன் தலைமீது ஓங்கி ஓர் அடிகொடுத்தான். அவ்வளவுதான் சிறுவன் அவ்வடி பட்டு அப்படியே மெய்மறந்து கீழே விழுந்து விட்டான். அமலநாதனுக்குத் தான் எவ்வளவுநேரம் தன்னை மறந்திருந்தான் என்பதுகூடத் தெரியாது. அவனுக்குத் தன் மயக்கம் தெளிந்து தன் சுய அறிவு தோன்றிய நிலையில் தன்னைக் கவனித்தபோது தன் கை, கால்கள் தளை செய்யப்பட்டுக் கப்பலில் எலிகளின் தொந்தரவு நிறைந்த ஓர் இருண்ட மூலையில் அடைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தான். அவனை ஒருபுறம் முன்னாள் வாங்கிய தலை அடி துன்புறுத்தியது; மற்றொரு புறம், இனி நம் வாழ்வு கடலில் இந்தக் கொடிய கப்பல் ஓட்டிகள் கையில்தான் கழிய வேண்டும் போலும் என்னும் அச்சமும், அவனை அலைகடலில் ஆழ்த்தியது. மாரியப்பன் பட்ட கஷ்டங்களையும் படும் கஷ்டங்களையும் நினைத்து நினைத்து அமலநாதன் தீயில் விழுந்த புழுப்போல் துன்புற்றான். துன்புற்று யாது பயன்? விதி யாரை விட்டது? எண்ணமும் ஏக்கமும் சிறுவனை வருத்துவதோடு நில்லாமல், நோயும் கொடியும் அவனை

வருத்தத் தொடங்கின. அவனுக்கு மருந்தளித்துக் கவனிப்பார் இல்லையால், அவன் உயிருக்கே ஆபத்து வந்துவிடும்போலக் காணப்பட்டது. இந்நிலையில் நீலன் என்னும் பெயரிய ஒரு கப்பல் பணியாளன் அவனை அண்மி மருந்தும் உணவும் உண்ணுமாறு செய்தான். அந்நீலன் என்பவன் சிறிது நற்குணம் படைத்த சீலன். முப்பதாண்டு நிரம்பிய மொய்ம்பன். இளைஞனுடைய பரிதாபமான நிலையைக் கண்டு இரக்கங் கொண்டு அந்த இருள் நிறைந்த இடத்தை விட்டு அகற்றி, ஒளியும், வளியும் நன்கு உலவும் அறையில் வைத்திருக்குமாறு ஒப்பற்ற தலைவனை வங்கநாதனை வேண்டியும் தூண்டியும் வந்தனன். இளைஞன் நோய் நீங்கிக் குணம் அடைய வேண்டுமானல், இவ்வாறு செய்தல் அன்றி வேறுவழி இல்லை என்று நன்கு எடுத்துக் காட்டி வந்தான்.

மாரியப்பனது உதவி அமலநாதனுக்கு வெகுவாகப் பயன்பட்டது. அவன் மூலம் கப்பல் கடாரம் வரை சென்று அங்குள்ள தோட்டங்களில் வேலை செய்யும் கூட்டத்தில் சிறுவனாகிய அமலநாதனைத் தள்ளிவிடுவதற்குரிய ஏற்பாட்டையும், அவ்வாறு அவனை உள்ளூரில் வாழாதபடி வெளியூரில் விட்டுவிடுவதற்காகப் பணமும் வேண்டிய அளவு வங்கநாதனுக்கு மங்கண்ணனால் கொடுக்கப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டான். வங்கநாதனின் பசப்பான வார்த்தைகளை நம்பி மோசம் போனதை அப்போது தான் உணர்ந்தான் அமலநாதன்.

"பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என்னும் மூதுரை

யின் உண்மைப் பொருளையும் அறிந்துகொண்டான். இந்த ஆபத்தானதும் இரக்கமுள்ளதுமான நிலையில் அமலநாதன் ஆண்டவனது அருளை நோக்கி நின்றான். உள்ளங் குழைந்தது.

கடையவ னேனைக் கருணையி னல்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுகண் டாய் விறல் வேங்கையின்
தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம் பிரானென்னைத் தாங்கிக்
கொள்ளே.

என்று தன் மனத்திற்குள் பாடிக்கொண்டான்.

சிறுவன் கப்பலில் வேலை செய்யும் ஒவ்வொருவருடைய குணகுணங்களைக் கவனித்துக் கொண்டே வந்தான். ஒவ்வொருவரும் முரட்டுக் குணம் உடையவராகவே காணப்பட்டனர். உயிரை வெறுத்தவராகவும் காணப்பட்டனர். ஒரு நாள் இரவு இவர்கள் யாவரும் நடுக்கடலில் மாளப் போவதாகக் கனவும் கண்டனன். கப்பற் பணியாளர்களுள் சிலர் வாழ்க்கையில் வெறுப்புடையவராய் இருந்தாலும், அவரவர் போக்கிலே எளிமை, பெருந்தன்மை, முதலிய குணம் வாய்ந்தவர்களாய் இருந்தனர். பாம்பு கொடிய விஷத்தைக் கொண்டதாயினும் தன்னோடு அருமையான மாணிக்கத்தையும் அன்றோ வைத்திருக்கின்றது. "அருமை மணி அளித்ததுவே நஞ்சம் அளிக்கும் அரவுபோல்." என்னும் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானின் சொற்பொருள் ஈண்டு நம் நினைவிற்கு வருகிறது. இந்தக் குழுவினர் பெருந்தன்மையான குணம் வாய்ந்

தவர் என்பது, அமலநாதன் வைத்திருந்த சிறு பணம், முதலில் களவாடப்பட்டுப் பின்பு மீண்டும் அவனிடமே சேர்க்கப்பட்டதினின்றே தெரியவருகிறது.

மாரியப்பன் படும் கஷ்டங்களைப் பார்க்கப் பார்க்கத் தான் படும் கஷ்டம் அவ்வளவு இல்லை என்பதை அறிந்து தன்னளவில் சிறிது ஆறுதல் அடைந்தான் அமலநாதன்.

கப்பல் பணியாளர்களில் கசடக் குணமே வடிவாக வந்ததோ என்று நினைக்கும்படி முனியன் என்னும் பெயரிய மூர்க்கன் ஒருவன் இருந்தான். அவன் குடியின் எல்லையைக் கரைகண்டவன். அக்குடிவெறியில் சிறுவனை மாரியப்பனுக்கு இழைக்கும் தீங்குக்கு அளவே இல்லை. கப்பல் தலைவனை வங்கநாதனிடம் போய் அறிவித்துக்கொள்ளும் நெஞ்சுஉரம் மாரியப்பனுக்குக் கிடையாது. ஏனென்றால், வங்கநாதன் சொல்புத்தி, சுயபுத்தி இரண்டும் இல்லாத மற்றொரு கொடியவன். இந்த நிலையில் ஏழைச் சிறுவனது பேச்சு எங்கே எசமானனுக்கு ஏற்கப்போகிறது? இப்படிப்பட்ட கொடுமைக் குணங்கட்கிடையே சிறுவனை மாரியப்பன் படும் துயரம் யாவும் அமலநாதன் துயரத்தைப் போக்கடித்து உள்ளத்தில் இரக்கமும் அன்பும் நிலைக்கச் செய்தன என்னலாம்.

ஒரு நாள் இரவு திடுமென அமலநாதன் எழுப்பப்பட்டான். எழுந்ததும் மாரியப்பன் செய்துவந்த பணியினை இனி அமலநாதன்தான் செய்ய வேண்டும் என்னும் உத்தரவு கப்பல் தலைவனிடமிருந்து வந்ததை உணர்ந்தான். காரணம் இன்னது எனப் புரிந்து கொள்ளாத குழப்பமான நிலையில் இருந்த அமலநாத

னுக்குக் காரணம் தெற்றத் தெளியப் புலனுயிற்று மாரியப்பன் முனியனுல் அடித்துக் கொல்லப்பட்டான் என்னும் செய்தி வெளியாயிற்று. அந்தோ! சிறுவன் கதி இவ்வாருே முடியவேண்டும்! என்ன செய்வது! இறந்தவன் இறந்தவனே! சிறுவன் இறந்ததற்குக் காரணம் முனியனது குடிவெறியே ஆகும். அளவு கடந்து குடித்து விட்டதனுல் மிருகத்தன்மையை அவன் அடைய நேரிட்டது. அந்த நிலையில் மாரியப்பனை அடித்துக் கொன்ருன் என்று அறிந்தான் அமலநாதன்.

கப்பலில் வட்டமாளிகை ஒன்று இருந்தது. அது கப்பலின் மேல்தட்டுக்கு ஆறடி உயரத்தில் கட்டப்பட்டது. போதுமான அகல நீளமுடையது. இக் கப்பல் தலைவனும் துணைத்தலைவர்களான முனியன், நீலன்; ஆகிய இவர்களும் தங்குதற்குரிய வசதிகளைப் பெற்றிருந்தது. இக் கட்டடத்தின் சுவர்களில் மாடங்கள் அமைக்கப்பட்டுக் கப்பல்தலைவர்களும் துணைத் தலைவர்களும் தங்களுக்குரிய தனிப்பட்ட பொருள்களை அங்கு வைத்துப் பூட்டிக்கொள்ளும் நிலையில் இருந்தது. இந்த வட்டமாளிகைக்கு நேராகக் கீழே நில அறை போன்ற அறைகளும் இருந்தன. இவற்றில் கப்பலின் பாதுகாவலின்பொருட்டுப் பயன்பட, கத்தி, ஈட்டி முதலான படைகளும், மற்றும் பல ஆயுதங்களும் அமைக்கப்பட்டிருந்தன. கப்பலில் பணி செய்வோர்க்கு வேண்டிய உணவுப்பொருள்களும் சேகரித்து வைக்கப்பட்டிருந்த இந்த அறைகள் வன்மையான கதவுகளைக் கொண்டு, காற்று நடமாடுதற்கு நல்ல பலகணிகளையுடையனவாய், மேலே சூரியனது

ஒளி நன்கு படக்கூடிய நிலையில் ஒரு துவாரத்தையும் கொண்டு இருந்தன. இந்த அறைகள் படைப்பொருளையும் உணவுப் பொருளையும் கொண்டிருந்தமையால், கப்பல் தலைவனது நேர்ப் பார்வையில் இருந்து வந்தன.

அமலநாதன் மாரியப்பன் செய்துவந்த வேலையை மேற்கொண்டான். இவன் கப்பலில் உள்ள பணியாளர்கட்கும் தலைவனுக்கும் உணவு கொண்டுபோக வேண்டும். அவர்கள் பெருங்குடியர்கள் ஆதலின், அக்குடிப் பொருள்களைக் குடிக்கும் நேரம் இன்னதென்று இன்மையால், அவர்கள் கேட்கும்போதெல்லாம் எடுத்துக்கொண்டு அமலநாதன் செல்லவேண்டும். அமலநாதன் இங்கும் அங்கும் ஓடி ஆடி வேலை செய்வதை உணர்ந்த முனியன் "மாரியப்பன் எங்கே காணோமே?" என்று உசாவினான். அவன் இறந்துவிட்டான் என்று கூறக்கேட்டதும் அவனது இறப்புக்குத் தானே காரணம் என்றும், குடிமயக்கால் இது நடந்தது போலும் என்றும் அறிந்து, அன்று முதல் கிழவன் அமலநாதனிடம் அன்பும், இரக்கமும் கொண்டு தன் முரட்டுக் குணத்தை விட்டொழித்தான்.

4. வங்கப் போர்

கப்பல் அமைதியாக நகர்ந்து பயணப் பட்டுக் கொண்டிருந்தது. திடீரெனப் புயல் கிளம்பியது. கப்பல் பயணம் ஆபத்தானது. கப்பல் இடையிடையே தோன்றும் புயலுக்கும் மழைக்கும் தப்பிச் செல்ல வேண்டும். கப்பற்கொள்ளைக்காரர்களின் கண்ணுக்குத் தெரியாமலும் போகவேண்டும். கடலில் உள்ளே

மறைந்து கிடக்கும் பாறைகளில் படாமலும் செல்ல வேண்டும். இத்தகைய ஆபத்துக்களைக் கப்பல் தலைவன் நன்கு அறிந்தவன் ஆதலின், கப்பலை நடுக்கடலில் நடத்தாமல் கரை ஓரமாகவே நடத்திச் சென்றான்.

இவர்கள் செல்லும்போது ஒருநாள் இரவு ஒரு சிறு படகு சிறிது தூரத்தில் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றனர். அதில் சில பிரயாணிகளும் இருந்தனர். உடனே கப்பல் தலைவன் தன் கப்பலில் உள்ள, ஆபத்துக் காலத்தில் பயன்படும் வண்ணம் வைக்கப்பட்ட படகுகளை இறக்கிப் பரவையிடைப் பரதவிக்கும் மக்களைப் பாதுகாக்க ஓடினன். ஆனால், அதில் இருந்த எல்லோரையும் காப்பாற்ற முடியவில்லை. ஒருவனை மட்டும் காப்பாற்ற முடிந்தது. மற்றவர் யாவரும் மறிகடலில் மாய்ந்தனர்.

உயிர் தப்பியவன் நல்ல உடற்கட்டும், வன்மையும் வாய்ந்த குட்டை வடிவினன். அம்மை வார்த்து ஆறிய முகத்தினன். அதனால், அம்மைத் தழும்புகள் முகத்தில் அமையப் பெற்றவன். கண்கள் நல்ல ஒளியுடையனவாய் விளங்கின. அவன் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து நல்ல யோக்கியதையுடையவன் என்பதை அறிவித்துக் கொண்டான். அவன் பெயர் வாமனன் என்பது.

வாமனனும், வங்கநாதனும் சிறிது உரையாடத் தொடங்கினர். இவர்கள் உரையாடலிலிருந்து வாமனன் அரசாங்கத்திற்கு எதிரான ஒரு கட்சியைச் சார்ந்த வீரன் என்பதும் தன் எஜமானர் வாழும் இடமாகிய காந்தளூர்ச்சாலைக்குச் சிறிது செல்வத்துடன்

செல்லவேண்டும் என்பதும், உடன் வந்த தோழர்கள் உயிர் இழந்தனர் என்பதும் அறியவந்தன.

வாமனன் தன்னைக் காந்தனூர்ச்சாலையில் இறக்கி விட்டால் அதற்குரிய கட்டணத்துடன் சிறிது வெகுமதியும் கொடுப்பதாகக் கூறினான். வங்கநாதன் பேராசைக்காரன். அவன் பணம் என்றால் எந்தக் காரியமும் செய்யத் தயங்காதவன் என்பது சிறுவனை அமலநாதனைக் கொண்டு வந்ததின் மூலமாகவும் அறியலாம். ஆகவே, வாமனனிடம் பெருந்தொகையை மேலும் எதிர்பார்க்க, "ஐயா, வாமனரே! நீர் அரசாங்க எதிரிகளின் கட்சியைச் சார்ந்தவர். உம்மை நாங்கள் கப்பலில் கொண்டு செல்லுதல் சட்ட விரோதம். இதை அரசாங்கம் அறிந்தால் எங்களைத் தண்டனைக்குள்ளாக்கும். ஆதலின் நாங்கள் உங்களை அடுத்த துறைமுகத்தில் போலீஸ் அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுக்க வேண்டியதுதான். இதற்கு என்ன சொல்லுகின்றீர்?" என்று ஏதோ சட்டத்தினின்று சிறிதும் விலகாத சீலன் போல் பேசினான்.

வாமனன் இந்த மிரட்டலான வார்த்தைகளுக்கெல்லாம் அஞ்சுபவன் அல்லன்; "பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாதது" போல, வங்கநாதன் பேச்சைக் கண்டு கலங்கவில்லை. உடனே, கப்பல் தலைவனைப்பார்த்து, "இதற்கு நான் அஞ்சுபவன் அல்லன். எந்தவித ஆபத்துக்களையும் எதிர்க்கும் ஆற்றலும் ஆண்மையும் உடையவன் நான். ஆனால், ஒன்றுமட்டும் நடக்கும். அதாவது என்னைப் போலீஸ்காரர் பிடித்துக்கொண்டால் அவர்கள் என்னிடம் உள்ள பணம்

எல்லாவற்றையும் பறிமுதல் செய்வர். அப்படிச் செய்தால் உங்களுக்குக் கொடுப்பதாகக் கூறிய பணம் கொடுக்க முடியாமல் போகும். நீங்கள் தான் நஷ்டப் படுவீர்கள்,'' என்றனன். இவ்வாறு சொல்லக் கேட்ட வங்கநாதன் உண்மையை உணர்ந்து, வாமனனை அவன் விரும்பிய இடத்தில் விட்டுவிடுவதாகவும் அதன் பொருட்டு முப்பது பொற்காசுகளைப் பெற்றுக் கொள்வதாகவும் ஒப்புக்கொண்டான். பிறகு வாமன னது களைப்பு நீங்க உணவும் உறையுளும் அளிக்கப் பட்டன. வாமனன் வந்த களைப்புத் தீரச் சிறிது கண்ணயரலானன்.

இதற்கிடையில் கப்பற்றலைவனும் அவனது துணை வனை நீலனும் எப்படியும் வாமனனைக் கொன்று, அவனிடம் உள்ள எல்லாப் பொருள்களையும் களவாடச் சதியாலோசனை செய்யலானர்கள். பிறர் பொருளை உள்ளத்தால் உள்ளலும் வஞ்சகத்தால் களவாடத் தன் மனத்தாலும் நினைத்தலும் தவறு என்பதை மனத்தில் சிந்தித்திலர்.

''உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறர்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்''

என்பது குறளன்றே? இவர்கள் பேசிக்கொண்டு இருக் கையில் அமலநாதன் கப்பல் தலைவனிடம் உணவுப் பொருள் கொண்ட அறையைத் திறந்து உணவு கொண்டுபோய் வாமனனுக்குக் கொடுக்கச் சாவிகேட்க வந்தனன். இவர்கள் ஒன்றுகூடிப் பேசிக்கொண்டி ருந்ததை உணர்ந்த வாமனன் ஏதோ சதியாலோசனை செய்கின்றனர் என்பதை ஊகித்தவனாய் இவர்கள்

பேச்சின் சாரத்தை அறிந்து கொண்டான். என்றா லும், தான் ஒன்றும் அறியாதவன் போலப் பாசாங்கு செய்தான். வட்டமாளிகையின் கீழ் அறை ஒன்றில் போர்க்கருவிகள் நிரப்பப்பட்டிருந்ததை முன்பே கூறினேம் அல்லவா? அவற்றைக் கொணர்கையில் ஒருவேளை வாமனன் ஐயம் கொள்ளக்கூடுமோ என்று சிந்தித்தனர். இந்நிலையில் அமலநாதனைத் தம் கை வசப் படுத்திக் கொண்டு வாமனன் அறியாவகை, கத்தி, துப்பாக்கி, ஈட்டி முதலான படைகளைக் கொண்டு வந்தால் அவனுக்கும் வாமனனிடத்திலிருந்து பெறும் பொருளில் சிறிது பங்கு கொடுப்பதாகக் கூறி னர். அவனும் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்பினாற்போலச் சம்மதித்தனன்; திறவுகோல் பெற்றுத் திரும்பினன். அவனது வருகையை இச்சதியாலோசனைக் குழுவினர் எதிர் நோக்கி நின்றனர்.

அமலநாதன் தலைவனது கருத்துக்கு நேர்மாறாக நடக்க ஆரம்பித்தான். அவன் கொலைகாரக் கூட் டத்தில் சேர்ந்து ஒரு பாவமும் அறியாத வாமன னைக் கொல்ல விரும்பவில்லை. ஆகவே, நடந்த செய்திகளை அப்படியே வாமனனிடம் கூறிவிட்டான். தான் வாமனனுக்கு எல்லா விதத்திலும் உதவி புரிவதாக வாக்களித்தான்.

வாமனன் தான் அகப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆபத்தான நிலையை அறிந்தான். தன் நண்பனான அமலநாதனுடன் எவ்வாறு இக்கொடியவர்களை வெல் வது என்பதைக் குறித்துச் சிந்திக்கலானான். கப்பலின் அமைப்பையும், நில அறை, வட்டமாளிகை ஆகிய இவற்றின் அமைப்பையும், கொலைஞர் குழு குழுமி

யுள்ள இடத்தையும் நன்கு கவனித்தான். கீழ் வரு மாறு போருக்குத் திட்டம் வகுத்தான்.

வட்ட அறையின் இரு கதவுகளில் ஒன்றை மூடி விட வேண்டுமென்றும், திறந்து வைக்கப்பட்ட ஒரு கதவருகில் வாமனன் இருக்க வேண்டும் என்றும், சன்னல்கள் யாவும் சாத்தப்பட்டு இருக்கவேண்டு மென்றும், அப்படையறை தம் பாதுகாப்பில் இருப் பதால் எதிரிகள் அவ்வறையினின்று எந்தப் படை யையும் தம்மை அறியாது எடுத்துப் பயன்படுத்த இயலாது என்றும், தன்னிடம் உள்ள கைத் துப்பாக் கியைக் கொண்டும் தானும் அமல நாதனும் கப்பற் றலைவனுக்கும் முனியனுக்கும் உரிய துப்பாக்கியைக் கொண்டும் எதிரிகள் வருவதை அறிந்த மாத்திரத்தில் சுட்டுவிடவேண்டும் என்றும் வாமனன் அமலநாத னுக்கு அறிவித்தான்.

இருவரும் தாம் பேசி முடிவு கட்டியபடி எதிரி களைத் தாக்குவதற்கு எச்சரிக்கையுடன் இருந்தனர். வாமனன் தன் கையில் துப்பாக்கியுடன் அறையின் வெளியே நின்று கொண்டிருந்தான். அமல நாதன் அடுத்த அறையில் அதாவது மூடப்பட்ட அறையில் ஒளிந்திருந்தான். அந்த அறையில் சூரிய ஒளி வரு தற்கென வைக்கப்பட்ட துவாரமும் நன்கு மூடப்பட் டிருந்தது. அஃது அவ்வாறு மூடப்படாமல் இருப்பின் எதிரிகள் உள்ளே குதித்து வரக்கூடும் என்பதை முன் கூட்டிச் சிந்தித்து அத் துவாரமும் அடைக்கப்பட்டது.

இரு திறத்தாரின் சதியாலோசனைகள் அன்று இரவே உருக் கொள்ளலாயின. கப்பற்குழுவினர்

ஒரு கூட்டமாக முனியனைத் தலைவனாகக் கொண்டு புறப்பட்டு வந்தனர். அதனை அறிந்த வாமனன் தன் துப்பாக்கியால் முன்னே வந்த முனியனைச் சுட்டு வீழ்த்தினான். இதனைக் கண்ட பின் அணியில் வந்தவர் நடு நடுங்கி வெற்றிகரமாகப் பின் வாங்கினர்.

இக்கூட்டம் பின் வாங்கும் சமயத்தில் மற்றொரு கூட்டம் பின் புறமாக வருவதைப் பலகணியின் மூலம் பார்வையிட்டான் அமலநாதன்; மிகவும் ஆண்மையுடன் தன் கையில் இருந்த துப்பாக்கியால் அக்கூட்டத்தைக் குறிவைத்தான். அக்குறி அக்கூட்டத்தில் ஒருவனை மண்ணுலகை விடுத்து விண்ணுலகு செலுத்தும் நிலையில் கூக்குரலிடச் செய்தது. மற்றும் இருமுறை சுட்டதும் கூட்டமே குழப்பமடைந்து பின் வாங்கத் தொடங்கியது. இவ்வாறாக இவ்விரு வீரர்களான வாமனனும், அமலநாதனும் முன்னும் பின்னும் வந்த எதிரிகளை ஓடச்செய்து விட்டனர். இவ்விருவரும் செய்த சண்டையில் எதிரிகளில் இருவர் மாண்டனர் என்பதும், ஒருவர் நன்கு காயப்படுத்தப்பட்டனர் என்பதும் புலனாயின எதிரிகள் இதனுடன் ஒழிதல் இன்றி மீண்டும் எதிர்க்க வருவர் என்பதை இவ்விருவர்களும் எதிர்பார்த்து நின்றனர்

அவர்கள் இவ்வாறு எண்ணி எதிர்பார்க்கையில் எதிரிகள் எந்த முறையில் இவ்விருவரையும் அடக்குவது என்பதைப் பற்றி ஆலோசனை புரியலாயினர். ஒரு குழுவினர் நேரே வாமனனை எதிர்த்துப் போவ

தென்றும், மற்றொரு குழுவினர் வட்ட மாளிகையின் மேலே ஏறி, சூரிய ஒளி வருதற்கென அமைக்கப் பட்டிருந்த கண்ணாடியை உடைத்து உள்ளே குதித்து வாமனனைப் பின்னால் சென்று அடர்ப்பதெனவும் தீர்மானித்தனர்.

இந்த ஏற்பாட்டின் படி ஒருவன் மேல் கூரையின் வழியே உள் இறங்கினான். அந்தச் சமயம் அமலநாதன் தன் கைத் துப்பாக்கியுடன் தயாராக இருந்து அவனைச் சுட்டு விட்டான். அவன் அப்படியே கூக்குரலிட்டுக் கொண்டே தரையில் விழுந்தான். அடுத்து ஒருவன் அந்தத் துவாரத்தின் வழியே வருவதைப் பார்த்து விட்டான் சிறுவன்; சிறிதும் பின்னடையாமல் அவனுடைய தொண்டையைப் பார்த்துச் சுட்டதும் அவனும் பெருங்குரலிட்டுக் கதறித் தட்டுத் தடுமாறி முன் இறந்து கீழே கிடந்தவன் மேல் விழுந்தான். அந்த நிலையிலும் அவனை விட்டு வைக்க மனம் இல்லாத அமலநாதன் மற்றொரு துப்பாக்கிப் பிரயோகத்தால் அவனையும் பரலோகத்திற்கு அனுப்பினான். அமலநாதன் தன்னைக் காத்துக் கொள்ளும் முயற்சியில் இருந்தான் ஆதலின், வாமனன் எந்நிலையில் இருந்தான் என்பதை அறிந்து கொள்ளக் கூடாதவனாக இருந்தான். தன் கட்டம் முடிந்ததனால் வாமனன் இருக்கும் திசை நோக்கிப் பார்க்கையில் அவனது நிலை ஆபத்தானதாக இருந்ததை உணர்ந்தான். இரண்டாவது முறை வந்த எதிரிகள் தொகையாலும் சிறிது மிகுந்து இருந்தனர். அவர்களில் ஒருவன் வாமனனை நெருங்கி அவனை அப்படியே இடுப்பில் கைகொடுத்துப்

பிடித்துக் கீழே இழுத்துச் செல்ல முயன்றுகொண்டிருந்தான். மற்றொருவன் தன் கையில் கொண்டிருந்த கோடரியால் ஒரே அடி அடித்து வாமனனைக் கொன்றுபோட முனைந்து நின்றான்.

இந்நிலையைக் கண்ட அமலநாதன் சிறிதும் தாமதிக்கவில்லை; ஒரு கூர்ங் கத்தியைக் கையில் கொண்டவனாய் வாமனனைப் பற்றிய ஆளை நோக்கி ஓடி வந்தனன். அமல நாதன் உதவி வரும் வரை வாமனன் காத்திருக்கவில்லை. அவன் கத்திப் போரில் வல்லவன். அவன் பின்னே செல்வதை ஒழித்துக் கொள்ளைக் கூட்டத்தினர் நடுவில் புகுந்து கத்தியை வீசி விளையாடத் தொடங்கினன். கத்தி வெகு வேகமாக நாலாபக்கமும் சுழன்று சுழன்று வருவதை யுணர்ந்த கொலைக் கூட்டத்தினர் ஒருவரும் அவனை நெருங்க முடியாத நிலையில் தூர விலகினர். ஒரு சிலர் முழங்காலில் கத்தி யடியும் பட்டனர். சில விநாடிகளுக்கெல்லாம் கூட்டம் தோற்றுச் சிதறுண்டு நாலா பக்கமும் ஓடத் தொடங்கியது.

மேல் தட்டைச் சுற்றி முற்றிப் பார்வையிட்டான் வாமனன். ஒருவரும் அவன் கண்ணுக்குப் புலப்படவில்லை. மீண்டும் தன் பழைய இருப்பிடமான அறையின் முன் வந்து நின்று கொண்டான். அறையில் மூவர் மாண்டு கிடந்தனர். ஒருவன் பிறர் சென்ற வழியை நாடிச் செல்ல முயன்று கொண்டிருந்தான். இக்கூட்டத்தினருள் எத்தனை பேர்கள் பெருங் காயத்துடன் வருந்துகின்றனர் என்று அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. வாமனன் அடங்கா

மகிழ்ச்சி கொண்டான். அமலநாதனது தைரியத்தையும் அவன் உதவி புரிவதாகச் சொற்படி நடந்து கொண்ட உண்மைக் குணத்தையும் கண்டு மெச்சி, அவனைக் கட்டி அணைத்துப் பலபடியாகப் பாராட்டினன். "அமலநாத! இனி நான் உன் நண்பன் அல்லன். நான் உன்னுடன் பிறந்த சகோதரன் போல் இருந்து உன் வாழ் நாள் முழுவதும் உதவி புரிவேன்," என்று வாக்குறுதி அளித்தான். இந்த வார்த்தைகள் அமலநாதனுக்கு ஓர் உள்ளக் கிளர்ச்சியும் ஊக்கமும் அளித்தன. அநாதையாகிய தனக்கு ஓர் ஆதரவு கிடைத்தது ஆண்டவன் செயல் என்று கருதினன். அகதிகட்கு ஆண்டவனே துணை என்னும் அருந்தொடரின் பொருளின் உண்மையை உணர்ந்து இன்புற்றான்.

வாமனன் தன் கத்தியைக் கொண்டு, இறந்த மூவர் உடலைக் குத்தி உயிருடன் இருக்கின்றனரா, அன்றி இறந்தவர் போலப் பாசாங்கு செய்கின்றனரா என்று பலமுறை சோதித்தான். இதற்கிடையில் நாலாமவன் ஒருவனும் இறந்து கிடந்தான். அவனையும் பரிசோதித்து இவர்கள் நால்வரும் இறந்துவிட்டது உண்மைதான் என்பதை உணர்ந்தான். தன் வெற்றி குறித்துப் பாடத்தொடங்கினன். வெற்றிக்குக் காரணமான கத்தியை வாழ்த்தினன். வீரர்கள் தம் வெற்றிக்குக் காரணங்களான படைகளை வாழ்த்துதல் இயல்பு.

இனிப் பகைவரால் யாதொரு துன்பமும் நேராது என்று உணர்ந்த இவ்விரு சகோதரர்களும் சிறிது

கண்ணயர்ந்து சோர்வினைப் போக்க எண்ணினர். ஆனால் இருவரும் ஒரே நேரத்தில் உறங்காமல் ஒருவர் உறங்கும்போது மற்றவர் விழித்துக் கொண்டு இருக்கத் தீர்மானித்து மாறி மாறி இம்முறையில் சிறிது கண்ணயர்ந்தனர். பொழுது விடிந்தது. வெள்ளென்று வானம் வெளுத்தது. கதிரவனும் இவ்விரு சகோதரரின் ஆண்மையை மெச்சிப் பாராட்ட வருவான்போல் கீழ்த் திசையினின்றும் புறப்பட்டான். சூரியனது வருகையைக் கண்ட இருளும் சந்திரனும் பகைவர் தோற்று ஓடுவது போல ஒளி மழுங்கி ஒளிந்தனர். நீலக்கடல் மரகதப் பாயல் விரித்தாற்போல மாட்சியுடன் விளங்கியது. இயற்கைக் காட்சியினைக் கண்ட இவ்வீர இளைஞர் மகிழ்ச்சியும் உவகையும் கொண்டவராய்த் திகழ்ந்தனர். ஆபலநாதன் காலை உணவைத் தயாரிக்கலானான். பாலன் தன் சட்டையில் தைக்கப்பட்டிருந்த வெள்ளிப் பொத்தான் ஒன்றை அறுத்து எடுத்து ஆபல நாதனுக்குத் தன் நினைவுக்கு அறிகுறியாக அளித்தான். அப்படி அளிக்கையில் 'தம்பி! நீ இந்தப் பொத்தானை என்போன்ற ஆடை அணிந்தவர்களை எங்கே கண்டாலும். அவர்களிடம் காட்டினால் உனக்கு வேண்டியவன் என்பதை அறிந்து அவர் உனக்கு வேண்டிய உதவி செய்வார்' எனக் கூறிக் கொடுத்தனன். அவனும் அதை மகிழ்வுடன் பெற்றனன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் எப்படியும் பகைவர் தம்மைச் சரண்புகுவர் என்று எண்ணிக் கொண்டிருக்கையில், அவர்கள் எண்ணியபடியே நீலன் மெதுவாக

வாமனனைக் காணவந்தான். இதற்கிடையில் கப்பற் றலைவனான வங்கநாதனும் அங்கு வந்து சேர்ந்தான். வாமனன் இவர்களது அமைதியான வருகையில் நம்பிக்கை அற்றவனாய்த் தான் வெகு எச்சரிக்கையாய் இருக்கத் தன் கையில் சிறு துப்பாக்கியைக் கொண்டனன். ஏனென்றால் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் என்னும் குறளின் கருத்து அவன் நினைவுக்கு வந்தது.

கப்பல் தலைவனும் உரம் கொண்ட உள்ளமுடைய வன். வாமனனைப் பார்த்து இனித் தான் தன் அருமைத் துணைவனை முனியனை இழந்தமையால் தன் கப்பலைச் செலுத்த மனம் இல்லை என்றும், அடுத்த துறைமுகத்தை அடைந்து அங்குச் சில மாலுமிகளை ஏற்றிக் கொண்டு அதன்மேல் தன் பயணத்தைத் தொடங்க வேண்டுமென்றும் கூறினன். மேலும் இனி வாமனனைச் சும்மா விடாமல் அங்கு உள்ள போலீஸ் இலாகாவில் அவன் அரசாங்க விரோதி என்பதை நிலை நாட்டி மாலுமிகள் பலரைக் கொன்றவன் என்னும் குற்றமும் உடையவன் என்பதையும் அறிவிக்கப் போவதாகவும் கூறினன். இவ்வார்த்தைகளைக் கேட்டும் வாமனன் சிறிதும் அஞ்சவில்லை. அதே போலீஸ் இலாகாவில் பலர் முன்னிலையில் தானும், இளைஞன் அமலநாதனும் தன்னைக் கொல்லச் சூழ்ச்சி செய்த, நன்கு போர்ப் பயிற்சி பெற்ற ஐம்பது மாலுமிகளைக் கப்பல் தலைவன் உட்பட வென்று வெற்றி கொண்டதை வெளிப்படுத்தி அப் பொது மக்கள் உங்களைக் கண்டு எள்ளி நகையாடும் அளவுக்குக் கூறுகின்றேன்,'' என்று நகையும் உவகையும் கலந்து

பேசினன். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் வங்க காரன் அப்படியே தம்பித்து விட்டான்; ஒன்றும் பேசிலன். அவன் அவ்வாறு ஆனதற்குக் காரணம்

" சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து "

என்று வாமனன் உணர்ந்து பேசிய பேச்சின் ஆற்றலேயாகும். மேலும் தன்னைத் தன் நண்பர்கள் இருக்கும் இடத்தில் இறக்கிவிட்டால் தான் முன் கூறிய முப்பது பொன்காசுகளைத் தடையின்றிக் கொடுப்பதாகக் கூறினன். வாமனன் பெருந்தன்மை வாய்ந்தவன். தன்பகைஞர் தனக்கு எவ்வளவு தீங்கு செய்திருந்தும் தன் சொல்லினின்றும் மாருதிருக்கப் பணம் கொடுக்க முன் வந்தது எவ்வளவு சிறந்த குணம் பாருங்கள்! இஃது,

" இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம செய்து விடல் "

என்னும் குணமாகும். தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் நன்மை செய்க என்பது தானே இதன் கருத்து.

கப்பல் தலைவனுக்குப் பணமே பெரிது. ஆகையால், பணிவாக வாமனனை, 'முப்பது போதாது அறுபது நாணயம் கொடுத்தால் நலமாக இருக்கும்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். என்றாலும், வாமனன் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. கப்பல் தலைவன் அந்த முப்பது நாணயமும் போய்விடப் போகிறது என்று எண்ணியவனாய் மனம் இல்லாமல் அப்பணத்தையே பெற்றுக் கொள்வதாகக் கூறினன்.

5. நாவாய் முறிவு

கப்பல் அமைதியாகப் போய்க்கொண்டிருந்தது. இருசகோதரர்களும் அக்காலத்து அரசியலைப்பற்றியும் கட்சிகளின் கருத்துக்களின் வேறுபாட்டைப் பற்றியும் உரையாடத் தொடங்கினர். இந்தப் பேச்சிலிருந்து வாமனனது வாழ்க்கை வரலாறு தொனிக்கலாயிற்று. வாமனன் அந்த நிலையில் எப்படி இருக்கிறான் என்பதையும், இனி எவ்வாறு விளங்குவான் என்பதையும் விளக்கினன். அரசியலைப்பற்றிய புரட்சிகளை இதுவரை அமலநாதன் கேட்டறியான். ஆதலின், வாமனனின் கூற்றுக்கள் அவனுக்கு ஒருவித உணர்ச்சியை ஊட்டுவனவாயின. வாமனன் அரசாங்கத்திற்கு எதிரான கட்சியைச் சார்ந்தவன் என்பதை உணர்ந்து கொண்டான். வாமனன் குறும்பர் கட்சியைச் சார்ந்தவன். இக்குறும்பர்க்குக் கொங்கர் பகைவர். குறும்பர்கள் கொங்கர்களை அடக்கப் பல வழிகளில் முயன்றனர். குறும்பர்களின் தலைவன் காட்டில் மறைந்து வாழ்ந்தான். அவ்வாறு வாழ்வானை மீட்டும் அரியாதனத்தில் அமர்த்தி ஆட்சி செய்ய ஊக்கம் கொண்டனர் குறும்பர். இவர்கள் முயற்சிகள் அனைத்தும் முடிவு பெற்றில. அம்முயற்சி சூரியன் முன்னே பனிபோல் ஆயது. இதனால் பெரிதும் சீற்றங்கொண்ட கொங்கர் இந்தக் குறும்பர் உயிரோடு இருப்பின் குறும்புகள் பலவும் செய்வர் என்று அவர்களை அடக்கி ஒடுக்கி ஆளத் தீர்மானித்தனர்; பல கொடுமைகளை இழைக்கத் தொடங்கினர்; கொங்கர்கட்கு விரோதமாக நடந்த சிலருக்குத்

ஆக்குத் தண்டனை விதித்தனர். சிலருடைய சொத்துக்களைப் பறிமுதலும் செய்தனர்; அபராதங்களையும் விதித்தனர். எந்தக் குறும்பரும் தமக்கென எந்த வித ஆயுதங்களைக் கொண்டிருத்தலும் கூடாதெனச் சட்டமும் விதித்தனர்.

அரசாங்கம் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தம் கட்சிக்குடன்பட்டவர்கள் எவராயினும் அவர்கட்கு வேண்டிய சலுகைகள் தந்து ஆதரிப்பது வழக்கம். இந்த வாய்ப்பை ஆசையும், தன்னலமும் நாட்டுப் பற்று இன்மையும் உடையவர்கள் பயன்படுத்திக் கொள்வர்.

இந்த முறையில்தான் அரசாங்கக் கட்சியும் எதிர்க் கட்சியும் தோன்றும். இக்கட்சிகளில் இருப்பவர்கள் தமக்குள் கருத்து வேறுபாடு நிகழின், அவர் அவர்கட்கு எதிர்க்கட்சிகளில் சேர்ந்து கொண்டு செயல் புரிவர். இன்னோரன்ன பயிற்சிகளை நன்கு பெற்றவன் வாமனன். வாமனன் முதலில் அரசாங்கப் படையில் ஒருவனாகப் பணி புரிந்து வந்தவன்.

இது நிற்க, கப்பல் அமைதியாகப் போய்க் கொண்டிருக்கையில் திடீர் என்று ஒரு குழப்பம் உண்டானது. கப்பல் தலைவன் வங்க நாதன் இரைக்க இரைக்க ஓடி வந்து வாமனனை அணுகிக் காமல் "திசை தப்பிச் செல்கிறது. இங்கு எனக்கு ஒன்றும் புரியவில்லை. இவ்விடங்கள் எல்லாம் உனக்கு நன்கு பழக்கம் இருக்கும் என்று நம்புகிறேன். நீதான் திசையறிந்து கப்பலைச் செலுத்தவேண்டும்." என்று கெஞ்சினான். 'திசையறியாது மயங்கும் மாலுமி

போல' என்னும் பழமொழி வங்க நாதன்பால் அப்போது உண்மையாயிற்று. வாமனன் வங்க நாதன் பேச்சில் நம்பிக்கை வைக்கவில்லை. ஏதோ இங்குச் சூழ்ச்சி செய்து தன்னைச் சிறையில் அடைக்கவோ, கொல்லவோ பார்க்கிறான் என்று எண்ணினான்.

வங்கநாதன் தன் உயிரை இழப்பதினும் மேலாகத் தன் கப்பல் கடலில் கரந்துள்ள கற்பாறைகளால் தாக்குண்டு உடைந்து போகாதிருக்கவே பார்த்துக்கொண்டு வந்தான். இந்நிலையில் வாமனன் தான் கப்பலைச் செலுத்த இயலாது என்றாலும் வங்கத்தை நடுக்கடலில் செலுத்தாமல் கரை ஓரமாகச் செலுத்துமாறு தான் யோசனை கூறுவது தவிர்த்து வேறு அறியாதவனாய் இருந்தான்.

கப்பலில் இருந்தவர்கள் இங்ஙனம் இன்னது செய்வதென்பதை உணராமல் சிந்தித்துக் கொண்டிருக்கையில் திடுமென ஒரு பெரிய அலை வீசக் கப்பல் நடுக் கடலில் சென்று சேர்ந்தது.

காற்றும் அலைக்குத் துணை செய்ததனால் கலம் மேலும் கீழுமாக ஆடத் தொடங்கியது; இவ்வாறு ஆடி ஆடிக் கரந்துள்ள கற்பாறையில் தாக்க ஆரம்பித்தது. கலத்திற்குப் பேர் ஆபத்து வந்திருப்பதை அனைவரும் அறிந்தனர் என்றாலும், மாலுமிகளால் மரக் கலத்தைக் காக்க இயலாதென்று தீர்மானித்துக் கொண்டனர். தன்னுயிர் தனக்குத் தித்திப்பு அல்லவா? அவர் அவர்கள் தப்பித்துக் கொள்ளக் கப்பலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த சிறு சிறு படகுகளை அவிழ்த்துவிட முயன்றனர். நாம் ஒன்று

நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் அல்லவா? அம்பிகளை அவிழ்ப்பதற்குமுன் ஒரு பேர் அலை எழுந்து கப்பலையே தலை கீழாகக் கவிழ்த்து விட்டது.

அந்தோ! கப்பல் கடலில் கவிழ்ந்தால் என்ன வரும் என்று எழுதவும் வேண்டுமோ? யாவரும் கடலில் மூழ்கினர். ஆனால், அமல நாதன் மட்டும் கடலில் போராடிக்கொண் டிருந்தான். அமலநாதனுக்கு நீந்தத் தெரிந்திருந்தும் கடலில் அது பலிக்கவில்லை. அலையின் மோதுதல் அவனை நீந்த விடவில்லை. இளை ஞனை மூழ்கடிக்கவே அலை முயன்றது. திக்கற்ற வர்களுக்குத் தெய்வம் துணை செய்யும் அல்லவா? மேலும் இறைவனது திருவருள் திறத்தை நம்மால் அளவிட்டோ அறிந்தோ கூற இயலாது. இறைவன் யார் யாரை எவ்வாறு காக்க வேண்டும் என்று அறிந்து அவ்வாறே காத்துவரும் கருத்துடையவன். இதனைத்தான் ஞான சம்பந்தப் பெருந்தகையார்,

"அட்பாலவர்க்கு அருளும் வண்ணம் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா' என்றனர்.
கல்லிடையுள சிறுதேரைக்கும் கருப்பை அண்டத்துயிர்க்கும்
புல்லுணவளித்துக் காக்கும் புனத்துழாய்க்கண்ணி

அண்ணல்

என்று குசேலோபாக்கியான ஆசிரியரும் கூறிச் சென்றனர்.

ஆகவே, அமல நாதனாகிய அநாதைச் சிறுவன் பால் இரக்கங்கொண்ட இறைவன் அவனைக் காக்க அவன் முன் பலகை ஒன்றைத் தோற்றுவித்தார். அது பாறையில் மோதுண்டு உடைந்த கப்பலின்

சிறு துண்டுப் பலகையாகும். அதில் ஏறிக் கொண்டான் அமல நாதன். அப்பலகை திரையின் மோதுதலால் மெல்ல மெல்ல இளைஞனைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது. சிறுவனும் தரையை அடைந்தனன்.

அமல நாதன் தீவின் கரையை அடைந்த நேரம் நடுநிசி. இவ்விரவில், இறைவனை வழுத்திக்கொண்டு பரிதியின் வருகையைப் பார்த்துக் கொண்டிருந்தான். பொழுது புலர்ந்தது. மெல்ல எழுந்து சுற்றுமுற்றும் நோக்கினன். தான் ஏறிவந்த கப்பலோ அன்றி மாலுமிகளோ தெரிகின்றனரா என்று தன் பார்வை செல்லக்கூடிய அளவுக்குப் பார்த்தான். எவரும் தென்பட்டிலர். மாலுமிகளும் மரக்கலமும் காணப்படாமல் போயினும், மாந்தர் எவரேனும் அத்தீவில் உளரோ என்று பார்த்தான். எவரும் இல்லாத இடமாக அத்தீவு இருந்தது. அமலநாதனுக்கு அங்குக் காணப்பட்டவை, வரைகளும், புதர்களும், மணலும், நீரும் அன்றி வேறு இல்லை.

தீவில் கீழ்த்திசை நோக்கிச் சிறிது நடந்தான். இடையில் கடல்நீர் அவனை மேலும் போக ஒட்டாது தடுத்து நின்றது. என்றாலும் இளைஞன் அதனைக் கடந்து மேலே செல்லத் தீர்மானித்தான். இவனைக் கரை சேர்த்த மரப்பலகையைத் துணைக்கொள்ள எண்ணினன். மீண்டும் திரும்பிக் கரையில் விட்டுவைத்த பலகையைக் கொணரத் தீர்மானித்தான். அமல நாதன் திரும்பிவந்து பலகையைப் பார்க்கும்போது அப்பலகை கரை ஓரத்தில் காணப்படாமல் அலையின்

அலையால் நகர்ந்து நகர்ந்து சிறுவன் எடுக்க இயலாத நீரோடையின் கரைக்கு வெகுதூரத்தில் சென்றுவிட்டது. அபலநாதன் மிகவும் மனம் உடைந்து மீண்டும் கீழ்த் [illegible] நோக்கிக் குறுக்கிட்டு நிற்கும் நீர்நிலையை அடைந்தான்.

ஆவினை மழைபொழிய இல்லம்வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதை கொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளொணா விருந்துவரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுஎன் றாரே.

[illegible] நாட்டுப் பழம்பாடல் அன்றோ? அந்த [illegible] இளைஞனுக்குத் துன்பத்தின்மேல் துன்பம் [illegible]. பகல் முழுதும் பெருமழை பெய்யத் [illegible]. பசியோ ஒரு பக்கம் வாட்டியது. [illegible] இளைஞனைப் பெரிதும் இடருறச் செய்தது. [illegible] அபலநாதன் ஈடுகொடுப்பான். இருக் [illegible] மோ மக்கள் நடமாட்டமற்ற நடுத்திடர்.

[illegible]க்கரை ஓரத்தில் சில நத்தைகள் ஊர்ந்து [illegible]ருந்தன. அவை ஓர் இனமுடையனவாகவும் [illegible] பல இனமுடையனவாக இருந்தன. "பசி ருசி [illegible]. நித்திரை சுகம் அறியாது" அல்லவா? அபலநாதன் ஆற்றொணாப் பசியால் வருந்தியதால் அந்நத்தைகள் சிலவற்றைப் பிடித்து அப்படியே பச் சையாகத் தின்றான். பசி மிகவும் மக்களை வாட்ட [illegible]பதை வெகு தெளிவாக நம் முன்னோர்

கள் கூறிச் சென்றுள்ளனர். 'சாணும் வளர்க்க அடியேன் படுந்துயரம் சற்றல்லவே' என்றார் முற்றுந் துறந்த பட்டினத்தடிகள். "இடும்பை கூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது" என்றார் ஔவை மூதாட்டியார். இவ்வாறு இருக்கப் பசியை எவ்வாறு இவ்விளைஞனல் பொறுத்திருக்க இயலும். ஆகவே, அந்நத்தைகளை அவன் அயின்றான் அந்தோ! சிறிது நேரத்திற்கெல்லாம் இளைஞனுக்கு வயிற்று நோய் கண்டது. அவன் சொல்லொணுத் துயர் உற்றான். வாந்தியும் எடுத்தான். அதனல் தின்றவை யாவும் வெளியில் வந்தன. இதனல் சிறிது சோர்வுற்றான். மீண்டும் பசி எடுக்கத் தொடங்கியது. என் செய்வான் இளைஞன்? மீண்டும் அந்த இறைச்சிப் பொருளையே உண்ணத் தொடங்கினன். ஆனல் இந்த முறை அவை அவனுக்கு யாதொரு துன்பமும் கொடுத்தில. வயிற்று நோயும் வரவில்லை. வாந்தி இல்லை. பகற்பொழுதை இவ்வாறு பொருத்த மற்ற உணவை உண்டு காலங் கழித்தான். இரவில் வெட்ட வெளியில் இல்லாமல் மலையில் ஒரு குகையில் தங்கி அவ்விரவைக் கழித்தான் இவன் தங்கியிருந்த தீவுக்கு அடுத்த தீவு மக்கள் வாழும் தீவாக இவனுக்குத் தென்பட்டது. அங்குச் சில வீடுகளின் புகைக் கூண்டுகளிலிருந்து புகைவரும் குறிகள் தோற்றம் அளித்தன. ஆனல் என் செய்ய இயலும்! அடுத்த தீவை எப்படி அடைவது என்பது தான் அவன் யோசனை.

மழை ஓய்ந்திலது. அடுத்த நாளும் பொழிந்து கொண்டிருந்தது. இரண்டாம் நாளும் அமலநாதன்

எங்கும் செல்வதற்கில்லை. இரண்டாம் நாளையும் பச்சை நத்தை இறைச்சியை உண்டு கழித்தான். மூன்றும் நாள் அவன் அத்திடரில் திரிந்துகொண்டிருக்கையில் ஒரு பொன் நாணயத்தைக் கண்டெடுத்தான். அதைக் கண்டதும் இத்தீவில் நமக்குமுன் யாரோ மனிதன் வந்து சென்றிருக்கவேண்டும். இன்றேல் இந்நாணயம் இங்கு இருக்க வேறு காரணம் இல்லை என்று எண்ணினான்; திடுமெனத் தான் தன் ஊரைவிட்டுப் புறப்படுகையில் முடிந்துவந்த நாணயமே இங்குத் தவறிக் கீழேவிழுந்து மீண்டும் கிடைத்ததோ என்று எண்ணியவனாய்த் தன் சட்டையைத் தடவினான்; அப்பொழுது அந்நாணயம் இருக்கக்கண்டு மகிழ்வுற்றான். மீண்டும் திரிகையில் மற்றுமொரு நாணயம் கிடைத்தது. அதையும் எடுத்துக்கொண்டான். இப்பொழுது அவன் மூன்று பொன் நாணயங்கட்கு உரியவனாய் விளங்கினான்.

மூன்றும் நாள் பிற்பகல் ஒரு மீன் படகு கடலில் செல்வதைக் கண்ணுற்றுக் களிப்படைந்த அமலநாதன் அப்படகில் உள்ளவரை உரக்க அழைத்தான். அவன் அழைப்பை அப்படகில் இருந்தவர்கள் பொருட்படுத்தவே இல்லை. அது செவிடன் காதில் ஊதிய சங்குபோல் பயனற்றதாகி விட்டது. இவ்வாறு அந்தப் படகோட்டியும் மாலுமியும் நடந்துகொண்டதாக அவன் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. ஆதலின் அவன் ஆச்சரியப்பட்டான். இனித் தான் தப்ப வழி இல்லை என்றும், அந்தத் தீவிலேயே உயிர்விட வேண்டியதுதான் என்றும், அவ்வாறு உயிர்விடுதற்குமுன் இறைவனைத் தொழுது

நான் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்களை மன்னித்துத் தன் ஆன்மாவை இன்பவாரிதியில் நிலைக்கச் செய்யவேண்டிக்கொள்வது என்றும் தீர் மானித்து விட்டான். பின்பு,

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே—நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு

என்று பாடி இறைவனைத் துதித்தான்.

நான்காம் நாளும் தொடங்கியது. அன்றும் அவன் கண்முன் ஒரு படகு தோற்றம் அளித்தது. அவன் மனக்களிப்பைத் தூண்ட வருவதுபோல அப் படகும் அவன் நின்ற திசை நோக்கியே வரலா யிற்று. தன்னைத்தான் காப்பாற்ற அப்படகு வருவ தாக எண்ணிக் களிப்புற்றான். அந்நாவாயில் தானும் ஏறிக் கொண்டனன். அதில் இருந்த இரு வருள் ஒருவர் தம்மொழியில் பேசத் தொடங்கி னார். அப்பேச்சு இவனால் அறிந்துகொள்ள இயல வில்லை. இதைப் படகில் உள்ளவர்களும் அறிந்து கொண்டனர். அவர்கள் பேச்சில் 'அலை' என்னும் சொல் ஒன்றுமட்டும் அவன் அறியக்கூடிய நிலையில் இருந்தது. அதிலிருந்து அலை அடிப்பது சிறிது குறைந்தால் அடுத்த தீவை அடைய முடியும்போலும் என்று யூகித்துக் கொண்டான். அவ்வாறே நீர் நிலையை அணுகி அலை ஓய்வை உற்று நோக்கினான். உடனே நிலப்பகுதி அவன் கண்முன் பட்டது. அதன் வழியே நடந்து அடுத்த தீவை அடைந்தான் அமலநாதன்.

6 புதுத் தீவு புகுதல்

புதுத் தீவை அடைந்த அமலநாதன் முதல் வேலையாக உணவும் உறையுளும் அளிக்கவல்ல வீடு தேட முனைந்தான். இவன் கண்ணுக்கு எதிரே சிறிது தொலைவில் ஒரு புகைக்கூண்டின் வழியே புகை வருவதைக் கண்டான். அதைநோக்கிச் சிறிது விரைவாக நடந்தான். இவன் புறப்பட்ட நேரம் மாலையானதால் அவ்வீட்டை அடைவதற்குள் இருளும் சூழ்ந்து கொண்டது. அவ்வில்லத்தில் ஒரு வயது முதிர்ந்த கிழவனைக் கண்டான். இளைஞனை அவ்விருத்தன் கண்டதும் முதலில், "உனக்குக் கப்பல் நலிந்தகாலத்து உடன் மூழ்கிய ஆட்கள் எவரைப்பற்றியேனும் ஏதேனும் தகவல் தெரியுமோ? என்று உசாவினன். முதியோன் மரியாதையும், உதார குணம் உடையவன். அமலநாதனுடைய மொழியை அவ்வளவாகப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உடையவன் அல்லன் என்றாலும் அமலநாதன் கேட்ட கேள்வியை ஒருவாறு புரிந்து கொண்டு வாமனன் இந்தத் தீவு வழியாகத்தான் சில நாட்களுக்கு முன்சென்றான் என்று கூறி, மேலும் வாமனனைச் சென்று காணத்தக்க இடத்தையும் குறிப்பிட்டான்.

அமலநாதன் இந்த நற்செய்திகளைக் கேட்டறிந்ததும் உடனே வாமனனைத் தொடர்ந்து கண்டுபிடிக்கப் புறப்படாமல் தன் களைப்பையும் இளைப்பையும் போக்கிக்கொள்ள அக்கிழவனிடம் தான் கடந்த நான்கு நாட்களாகப் பட்ட இன்னல்களை எடுத்துக் கூறினன். இவற்றைக் கேட்ட அவ்விருத்தனும் அவன் மனைவியும்

மனம் பெரிதும் இளகினர். அமலநாதன் அழகும் அமைதியும் உடையவனாகக் காணப்பட்டமையால், அவன்மீது இரக்கங்கொண்ட அவ்விரு முது தம்பதிகள் அவனைத் தேற்றித் தம் மகனெனவே பாவித்து, அவனுக்கு நல்ல உணவு ஈந்து, அவனுடைய களைப்பைப் போக்கினர். அமலநாதன் அன்று இரவு அங்குத் தங்கி நன்கு உறங்கினான். காலையிலும் எழுந்திருக்காமல் தொடர்ந்து தூங்கினான். பாவம்! அவ்வளவு களைப்பை அவன் கடந்த நான்கு நாட்களாகப் பெற்றிருந்தான் அல்லவா? இவ்வாறு தன் சோர்வு தீர உறங்கி எழுந்தபின் மருந்தும் விருந்தும் மூன்று நாட்களுக்குமேல் கூடாது என்பதற்கிணங்க, அத்தம்பதிகளிடம் இருந்து விடைபெற்றுத் தன் பயணத்தை மேலே தொடங்க எண்ணி, அம்முதியோர் தனக்குச் செய்த உபகாரத்திற்காகப் பெருநன்றி செலுத்திப் புறப்பட்டான்.

அமலநாதன் வழிக்கொண்டான். ஆனால் எந்தச் சாலையின் வழியே செல்லவேண்டும் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அத்துணை கவர்பட்ட சாலைகள் அங்கு இருந்தன. இவனுக்கு நன்முறையில் வழி காட்டுகிறவர்களும் எவரும் இலர். சிலருக்கு இவனது செந்தமிழ் தெரிந்திருந்தும் தெரியாததுபோல் பாவனைசெய்து பராமுகமாய்ச் சென்றனர். வாயைத் திறந்தால் வாய் முத்தம் சிந்தும் என்று கருதினர் போலும்! வேறு சிலர் அமலநாதன் வெளிநாட்டவன் என்று அறிந்து இவனிடம் இருந்து பணம் பறிக்கக் கருத்தாய் இருந்தனர். இவ்வாறு பணம்பெற விரும்புகிறவர்கள் ஏழைகளாயினும் தம்மை ஏழைகள்

வெளிக் காட்டிக்கொள்ள விரும்பாதவர்கள். தம் சிறப்பாம் குணத்தை அவர்கள் மேற்கொண்டிருந்த வா! இவ்வளவு கூறுவானேன்? அங்கிருந்த இரவலர் களும் தாமாகச் சென்று பிச்சைகேட்கும் பழக்கத்தை அறவே நீக்கித் தம் வறுமையையும் வருத்தத்தையும் உணர்ந்து கொடுப்பவர் உதவியைமட்டும் பெற்று வாழ்ந்து வந்தனர்.

> “இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்”

என்பது அவர்கள் கொள்கை போலும்!

இத்தகைய அருங்குணம் வாய்ந்த மக்களைப் பார்த்து அவர்கள் பண்பாட்டை வியந்து சென்ற அமலநாதன், இரவு வந்ததும் ஒரு குடிசையை அடைந்தான். அது அக்கம்பக்கத்தில் தன்னைப்போல வேறு குடில்களைக் கொண்டதாக இல்லாமல் தனித்து இருந்தது. அந்த இடத்தையே அமலநாதன் அடைந்தான். அந்தக் குடிசைக்குரியவர் முதலில் அமலநாதனைத் தன் அகத்தில் அணுக ஆதரவு அளிக்க வில்லை என்றாலும் அந்த இரவைக் கழிக்கவேண்டி இருத்தலின், தான் அன்று தங்குதற்குக் கட்டணம் கொடுப்பதாகக் கூற, அக்குடிசைக்குரியவன் அமலநாதனுக்கு உணவும் உறையுளும் ஈந்து அன்பு காட்டினான். இந்த மனிதனது சுபாவம் அமலநாதனுக்குப் பிடிக்கவில்லை. இவன் தன்னிடம் உள்ள சிறு பொருள்களையும் திருடிக்கொள்வானோ? என்றும் அச்சங் கொண்டான். அமலநாதன் எண்ணியது உண்மை தான். அக்குடில்வாசி கொடியவனே. அவன் இவ்

வாறு வழிதவறிவரும் அன்னியரிடமிருந்து பணத்தை பறித்துக் கொள்வதே அவன் தொழில். அகத்தின் அழகு முகத்தில் தெரிந்துவிடும் அல்லவா? இறைவன் அருளால் அன்று இரவை அமலநாதன் அங்குக் கழித்துவிட்டான். அவனுடைய பொருட்டு யாதொரு தீங்கும் நேரவில்லை. நகரத்தை அடைதற்குரிய நல்ல வழியைக் காட்டினால் தான் சிறிது பொருள் தருவதாக அவனிடம் கூறினான். இவ்வுதவிக்கு அத்தீவுவாசி உடன் வருவதாக ஒப்புக்கொண்டான். இருவரும் புறப்பட்டனர். சிறிதுதூரம் சென்று பின் இருவரும் ஒரு சாலையின் ஓரத்தில் உள்ள ஒரு மரத்தின்கீழ் அமர்ந்தனர். உடன்வந்த ஆள் எதிரே சுட்டிக் காட்டி 'இந்த வழியே நடந்து சென்றால், நீ போக விரும்பும் இடத்தை அடையலாம். அது நீண்ட தூரத்திலும் இல்லை' என்று கூறினான். இவ்வாறு நடுவழியில் நட்டாற்றில் கைவிடுவதுபோல் குறித்த இடத்தில் கொண்டுவந்து சேர்க்காமல் இடத்தைச் சுட்டிக் காட்டி விட்டு விடுவதுபற்றி அமலநாதனுக்குச் சினம் எழுந்தது. உடன்வந்த ஆள் நீ கொடுத்த பணத்திற்கு இவ்வளவுதூரம் வந்ததே போதுமானது. இன்னமும் நான் உன்னைத் தொடரமாட்டேன். அதிகம் பேசினால் கொலை செய்வேன் என்று பயமுறுத்தித் தன்னிடம் இருந்த கத்தியைக் காட்டினான். அமலநாதன் அதற்கு ஒன்றும் பேசாமல் சுட்டிக்காட்டிய வழியே நடக்கலுற்றான். வழியே ஒரு குருடனைக் கண்டான். அவன் குருடனேயானாலும் அவ்வழி அனைத்தும் அவன் நன்கு அறிந்தவன். வழிப்பறிக் கொள்ளையே அவனது சீவனம். அத்தகையவன் அமலநாதனுடன் தொடர்ந்து

வழி காட்டுவதாகக் கூறினான். ஏதோ ஓர் எண்ணம் அமலநாதன் உள்ளத்தில் தோன்ற, அவனை உற்றுக் கவனித்தான். அவன் தன்னிடம் ஒரு கைத்துப்பாக்கி வைத்திருந்தான். தன் அருகில் அவன் நெருங்குவதையும் கவனித்தான். ஒருவேளை தன்னைக் கொன்று தன்னிடம் உள்ள பொருளைப் பறித்துக் கொள்ள முயல்கின்றானோ என்றும் எண்ணினான். எப்படியோ அவனிடம் இருந்து தப்பித் தானே தனியே நடந்து ஓர் உணவு விடுதியினை அடைந்தான். அவ்விடுதித் தலைவன் அமலநாதனை இன்முகம் காட்டி நல்லுரை கூறி வரவேற்று உபசரித்தான்.

அமலநாதன் அங்கிருந்து புறப்பட்டு மேலே செல்ல வேண்டியவனானான். அடுத்த வளநகர் என்னும் ஊரை அவன் அடையவேண்டும். அவ்வூர் தரை மார்க்கத்தின் வழியே சென்று அடைதற்கு இன்றிப் படகின் மூலம் இடையேயுள்ள நீர்நிலையைக் கடந்து அடையவேண்டியதாக இருந்தது. ஆகவே, அந்நீர் நிலையில் படகுகளுக்குத் தலைவனாக இருந்த குகன் என்னும் பெயருடையவனைத் தனித்த முறையில் கண்டு, அவனிடம் வாமனனைப்பற்றி ஏதேனும் தெரியுமோ என்று இரகசியமாகக் கேட்டனன். அதனோடு, வாமனனை அடைய ஏதேனும் வழியுண்டோ என்றும் வினவினான். அப்படகோட்டிகளின் தலைவன் வாமனன் கட்சியைச் சார்ந்தவன் என்பதை அமலநாதன் யூகித்தறிந்ததனால் அவனையே வாமனனைப்பற்றிக் கேட்டனன். அதனை அறிவித்தால் சிறு தொகையும் உதவுவதாக வாக்களித்தான். இவ்வாறு பணவுதவி செய்வதாகக் கூறியது குகனுக்குப் பிடிக்க

வில்லை. அதனால் அமலநாதனை வெறுப்புடன் பார்த்தனன். உடனே அமலநாதன் வாமனன் தன்னிடம் கொடுத்த வெள்ளிப்பொத்தானைக் காட்டியதும், அமலநாதனிடம் அன்புதோன்ற உரையாடி, தருமன் என்பவன் இல்லத்தை அடைந்தால் வாமனனைப்பற்றி அறியலாம் என்றும், வழியில் எவருடனும் எதையும் பற்றிப் பேசுதல் கூடாது என்றும் கூறித் தருமன் இல்லத்தை அடையும் மார்க்கத்தையும் கூறினன்.

குகன் மொழிப்படியே அமலநாதன் தருமன் இல்லம் நாடிப் புறப்பட்டான். இடைவழியில் ஒரு மதப் பிரசாரகரைச் சந்தித்தான். அவர்மூலம் அரசாங்கக் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் ஏற்பட்ட பகைமைக்குரிய காரணங்களை அறிந்துகொண்டான். அவர் வயது முதிர்ந்தவர் ஆதலின், பொடிபோடும் பழக்கம் கொண்டிருந்தார். பொடி போடுபவர், பொடியை யாரைக் கேட்பது யாரைக் கேட்கக்கூடாது என்பதைச் சிறிதும் யோசியாமல் கண்டவர்களை எல்லாம் கேட்பர்; அப்படிக் கேட்கப்பட்டவர் பொடி போடுபவரா என்பதைப்பற்றிக் கவலைப்படமாட்டார் ஆகவே, மதப் பிரசாரகர் அமலநாதனைப் பொடி இருக்கிறதா என்று கேட்டார். அவனிடம் பொடி யேது? இல்லை என்று கூறிவிட்டான். அவனுடன் மதப் பிரசாரகர் தம் இல்லத்தை யடைந்தார். வீட்டிற்குள் நுழைந்து ஒரு டப்பி நிறைய வைத்திருந்த பொடியைத் தம் மூக்கில் அடைத்துக் கொண்டபிறகு அமலநாதனைத் தம் வீட்டில் தங்கி அன்று இரவு உண்டு, உறங்கிவிட்டுச் செல்லுமாறு வேண்டினார். அதற்கு அமலநாதன் சம்மதித்தான். கரும்பு தின்னக்

வி கொடுப்பதுபோல, ஆறு அணு வேறு அன்புடன் கொடுத்தனர். அமலநாதன் அதை வாங்க மறுக்கவில்லை. ஏனெனில், அஃது ஒரு பெரியவரால் அன்புடன் கொடுக்கப்படுவதால் அதனை இன்புடன் ஏற்றுக்கொண்டான்.

7. கொலையும் குழப்பமும்

அமல நாதன் தன் பயணத்தை அடுத்தநாள் மேற்கொண்டான். இவனை நன்கு உபசரித்த மத போதகர் இவன் கடக்கவேண்டிய ஆற்றைக் கடப்பதற்கான ஒரு படகையும் ஏற்பாடுசெய்து கொடுத்தார். இவன் அப்படகில் ஏறிக்கொண்டு நதியைக் கடக்கையில் பல கூலியாட்களைத் தீவாந்தரங்களில் வேலை செய்வதற்கு ஏற்றிச் செல்லப்பட்ட ஒரு கப்பலைக் கண்டான். அதில் இருந்த ஆட்கள் அனைவரும் தம் சொந்த நாட்டை விடுத்து ஏகுவது குறித்து வருந்தும் அழுகுரல் அமல நாதன் காதுகளில் விழுந்தது. மேலும் இவன் சென்ற வழிகளில் அரசியல் படைஞர் சிலர் தொலை தூரத்தில் இருந்துகொண்டு மலைநாட்டுப் பகுதிகளில் காவல் புரிவதையும் கண்ணுற்றான். அப்படிக் காவல் காத்ததற்குக் காரணம் அம்மலைநாட்டுப் பகுதியோர் அரசாங்கத்திற்குமாறாகக் குழப்பத்தை ஏற்படுத்தல் செய்த இடமாகும். அமல நாதன் தன் படகைவிட்டு இறங்கிக் கீழைக்கரை ஓரமாக நடந்து செல்ல எண்ணினன். அவனுக்கு வழிநெடுக மலைத்தொடர் காணப்பட்டது. இடையே வட தெற்காக ஒரு பாதை நடமாட்டத்திற்குரியதாக இருந்தது. அதனையும் கண்ணுற்றான். இந்தப் பாதை வழியே

நடந்து போகையில்தான் வருங்காலத்தை எப்படிக் கழிப்பது என்பதைப்பற்றித் தனக்குத்தானே சிந்திக்கத் தொடங்கினன்.

இவன் சிந்தனை பலவாருக இருந்தது. இவன் தன் கப்பல் நண்பனை வாமனனைக் கண்டுபிடிப்பதில் கருத்தைச் செலுத்தினன். அவனைக்கண்டு அவன் கட்சியில் சேர்ந்து சிலநாட்களுக்குப் பிறகு முதல்முதல் புறப்பட்ட தன் ஊருக்குப் போகலாம் என்று எண்ணினன். மீண்டும் தன் சிற்றப்பனது கொடுங் குணங்களைப் பற்றிய நினைவுவர அவன் ஊராகிய நல்லூருக்குச்செல்லவும் அவனுக்கு மனம் வரவில்லை. அன்றி, தன் தந்தையாரின் நண்பரான ஆபத்சகாயர் ஊருக்கும் சென்று அவரைக் காணவும் எண்ணினன். ஏனெனில் அந்த ஆபதசகாயர் பரம ஏழை. அவர் குணத்திற்கு ஏற்ற பண நலம் அவரிடம் இல்லை என்பது அமல நாதனுக்குத் தெரியும். வாமனனேடு சேர்ந்து கட்சிக்காரனுக இருக்கவும் பயந்தனன். அவனை அரசாங்கப் போலீஸார் பிடிக்க வட்டமிட்டுக் கொண்டிருப்பதையும் அவன் குழுவினர் அரசாங்கத் துரோகிகள் என்பதையும் உணர்ந்தனன்.

இவ்வாறு அமல நாதன் இன்னது செய்வது என்பதை அறியாதவனுய் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் மலை வழியே ஒரு குதிரைப் படை வருவதைக் கண்ணுற்ருன். அப்படை செவ்வணி அணிந்த படையாக இருந்தது. அப்படைக்கு முன்னே இவர்ந்துவந்த அப்படை வீரர் தலைவன் ஒருவன் தலையில் ஒரு பெரிய சிவப்புப்பாகை அணிந்திருந்தான்

இந்தச் செவ்வணி அணிந்த படைவீரனுக்கு அடுத்து வந்தவன் ஒரு வழக்கறிஞன்போல் காணப்பட்டான். அதற்கும் அடுத்தாற்போல் ஒரு பணியாளன் தொடர்ந்து வந்துகொண்டிருந்தனன். அவன் அந்தச் செவ்வணி அணிந்த படைவீரனது பொருள்களைத் தாங்கிக்கொண்டு வந்தனன். அவனுக்கும் அப்பால் நாட்டாண்மைக்காரன் வந்துகொண்டிருந்தனன்.

படைத் தலைவன் அமலநாதனை நெருங்கியதும், அமலநாதன் சும்மா இராமல் அரசூருக்கு எவ்வழி செல்ல வேண்டுமென வினவினன். அமலநாதன் உலக அனுபவம் ஒரு சிறிதும் அமையப்பெறாதவன். யாரிடம் எதைப்பற்றிப் பேசவேண்டும் என்பது தெரியாது. அவன் அரசூருக்கு வழி வினவியதைக் கேட்ட அப்படைத் தலைவன், 'தம்பி! நீ ஏன் அரசூருக்கு வழி வினவுகிறாய்? அங்கு யாரை நீ சந்திக்கவேண்டும் என்று கேட்டனன். அமலநாதன் கள்ளம் அறியாதவன். ஆதலால்தான் அங்குவாழும் மறைமலையப்பனைப் பார்க்க வேண்டுமெனக் கூறினன். அம்மறைமலையப்பன் இந்தச் செவ்வணிப் படைஞருக்கும், இவனைச் சார்ந்தவருக்கும் பெரிய வைரி. இஃது அமலநாதனுக்குத் தெரியாது. அந்தச் செவ்வணிப் படைஞனும் அவனுடன் வந்தவர்களும் சிறிது ரகசியமாகப் பேசிவிட்டு, அவன் தான் அரசனுடைய பிரதிநிதி என்றும், தனக்கு அரசாங்க வைரிகளை அடக்கி ஒடுக்குதற்குரிய உரிமை கொடுக்கப்பட்டுளது என்றும் இளைஞனிடம் கூறினன். இப்படிச் செவ்வணிப் படைஞனும் இளைஞனும் உரையாடிக் கொண்டிருக்கையில் எங்கேயோ மறைவில் இருந்து ஒரு துப்பாக்கி ரவைகள் அப்பிரமா

மீதிருந்த படைஞன்மீது பாய்ந்ததால் சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கீழே விழுந்து இறந்தான். இந்த நிகழ்ச்சி அங்கு இருந்த ஒவ்வொருவரையும் திடுக்கிடச் செய்தது. அவர்களைத் துன்பக் கடலில் ஆழ்த்தியது.

அமல நாதனும் இறந்தவனைக் குறித்து இரக்கம் கொண்டு கொலைசெய்தவனைக் கண்டுபிடிக்க முனைந்தான். அவனுக்கு முன்னே சிறிது தூரத்தில் ஒரு பருத்த மனிதன் கருஞ்சட்டை அணிந்தவனாய்க் கையில் ஒரு பழைய துப்பாக்கியுடன் மறைவதைக் கண்ணுற்றான். அவனைக் கண்டதும் தன்னுடன் இருந்தவர்களை நோக்கி, அதோ! அதோ! அந்தப் புதரில் கொலைஞன் மறைகிறான். வாருங்கள்! வாருங்கள் என்று அமல நாதன் முன்னே ஓடினான். ஆனால், அமல நாதனைப் பின்தொடர்ந்த குதிரைவீரர் முற்றிலும் பின்தொடராமல் " தம்பி! நீ போகவேண்டாம்; திரும்பிவிடு" என்றுகூறி அவனைத் தொடராது தடுத்தனர். இதனால் அமல நாதனுடைய வேகம் தடைபட்டுக் கொலைஞன் தப்புவதற்கு வழியாயிற்று.

குதிரை வீரர்களில் சிலர் அமல நாதன்மீதே சந்தேகம் கொள்ளலாயினர். இவன் அக்கொலைஞன் கூட்டத்தைச் சார்ந்த ஒருவனாக இருக்கவேண்டும் என்று எண்ணினர். அதனால்தான் தம் குதிரை வீரனை நிறுத்திப் போக்கைத் தடைசெய்து மறைவில் இருந்து சுடுமாறு செய்தான் என்று யோசிக்கலாயினர். அந்தோ பாவம்! அமல நாதன் ஒரு பாவமும் அறியாதவன்! பழியோரிடம் பாவம் ஓர் இடம்.

அமலநாதன் முன்னும் குதிரைவீரர் பின்னும் ஓடினார்கள். ஆகலின், அமலநாதன் குதிரையின்மேல் விட்டு விலகியே இருந்தான். குதிரை வீரர் தலைவனைச் சிறைப்படுத்தவோ, என்னவோ தம்மைத் தொடர்ந்துவந்த சில வீரர்களை நோக்கி, அவ்வீரனைப் பிடியுங்கள். உங்களில் யார் அவனைப் பிடிக்கின்றனரோ அவர்களுக்கு 50 ரூபாய் பரிசு கொடுக்கப்படும் என்றனர். பணம் என்றால் பேயும் வாய் திறக்கும். ஆதலின், அமலநாதனைத் தொடர்ந்து ஓடினர். அமலநாதன் தன்னையே பிடிக்க வருகின்றனர் என்பதை எண்ணித் தன் முழுப் பலத்துடன் ஓடினான். ஓடியவன் குறித்த பக்கமே ஓட முடியாது பாதையும் மரஞ்செடி அடர்ந்த இடத்தை அணுகியவன் அங்கு இன்னது செய்வது என்பதை அறியாமயங்கித் திகைத்தான். அந்தச் சமயத்தில் எதிர் பாராவண்ணம் ஒருவன் அவன் காதருகில், 'தாமதியாதே; ஓடு ஓடு; அஞ்சாதே'' என்று சொன்னதும் முன் பின் பாராமல் சொன்னபடியே இளைஞன் குதிக்கலானான். அக்கரைக்குத் திரும்பிப் பார்த்ததும் தன் பக்கத்தில் வாலிபனொருவன் தன் மீன் பிடிக்கும் தூண்டில் கழியுடன் நிற்பதைக் கண்டான்; கழிபேர் உவகை கொண்டான். ஆனால் இருவரும் இன்பமாய் அளவளாவிப் பொழுதுபோக்க காலங் கழிப்பதற்கு அவர்கட்கு அவகாசம் இல்லை. அவர்கள் பகைவரிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தமையால் தங்களால் எவ்வளவு வேகமாக ஓடி மறைய முடியுமோ அவ்வளவு வேகமாக அந்தக் காட்டில் ஓடினர். காடு முள்ளும் புதரும் நிறைந்திருந்தபோதிலும் அவற்றை

யும் பொருட் படுத்திலர். காரியமே கண்ணாயினு மெய்வருத்தம் பார்ப்பரோ? பாரார். இவ்வாறு ஏற குறையக் கால்மணி நேரம் ஓடிச் சிறிது இளைப்பாறி நின்றனர். மீண்டும் நின்ற இடத்திலிருந்து முன்பு எங்கிருந்து புறப்பட்டனரோ அந்த இடத்திற்கு ஓடி னர். இப்படி இருமுறை ஓடியதன் காரணம் தம் அடிச்சுவடு பிறர் அறிந்து தம்மைப் பிடிக்காவண்ணம் பகைவர் குழம்பிப் போவதற்கே யாகும். இடையே விழுந்து சிற்சில இடங்களில் நாய்போலப் புரண்டும் எழுந்தனர். இவ்வளவும் வாமனனுடைய புத்திக் கூர் மையால் ஏற்பட்ட செயல்களாகும்.

அமல நாதனும் வாமனனும் தம் அடிச்சுவடு பிறர் அறியாவண்ணம் இருக்க இவ்வாறு செய்த பிறகு சிறிது இளைப்பாறினர். அமல நாதனுக்கு மட் டும் வாமனனிடம் வெறுப்பு ஏற்பட்டது. குதிரை வீரனை நேர்முகமாகச் சுட்டு வீழ்த்தாமல் மறைமுக மாகச் சுட்டு வீழ்த்தியது அவனுக்குக் கோழைத்தன மாகக் காணப்பட்டது. ஆகவே, வாமனனோடு இருக்க மனம் இசையாதவனாய்த் தான் தனியே செல்வதாகக் கூறினன்.

வாமனன் அமல நாதனிடம் அளவுகடந்த அன்பு கொண்டவன். தன்னிடம் இவ்வாறு அமல நாதன் கூறியபோதும் அவனைத் தான் வெறுக்காமல் பொறு மையோடு இருந்து, குதிரை வீரன் கொலையைப்பற்றி ஒன்றும் கூறிலன்; கூறவும் விரும்பிலன். அமல நாத னும் இந்தச் சமயத்தில் அறிவுடையவனாகவே நடந்து கொண்டான். அதற்குமேல் வாமனனை ஒன்று

[illegible]லையைப் பற்றி உசாவிலன். தானோ தன் நண்பன் வாமனனோ குதிரைவீரனைக் கொலை செய்யாமையால், தம்மீது இருக்கிற ஐயம் நீங்குவதற்காகத் தாமே போலீசுக்குத் தெரிவித்து விடுவது என்னும் யோசனையை வாமனனுக்குக் கூறினன். ஆனால், வாமனன் [illegible] அவ்வளவு எளிதில் இடங் கொடுத்துவிடுவானோ? அமல நாதன் யோசனை அவ்வளவு நல்லதன்று என்றும், இது "தான் சாவத் தானே மருந்து குடித்தல் போலும்" என்றும் கூறினன். வாமனன் கூறுவதும் உண்மையே என்பது அமல நாதனுக்குத் தெரிய வந்தது. வாமனன் கட்சிக்கும், குதிரைவீரன் கட்சிக்கும் நீராப்பகை இருப்பதால் போலீசாரும் [illegible]ண்மையைக் கூறும்போதும் ஐயப்பட்டுத் தங்கள் நியாயத் தீர்ப்பு அளிக்கமாட்டார்கள் என்பது இப்பொழுதுதான் அவனுக்குத் தெரியவந்தது. இந்த [illegible] நண்பன் தோழனை வாமனனை விட்டுப்பிரியா[illegible]யாய் அவனுடனும் அவன் கூட்டாளிகளுடனும் இருக்கத் தீர்மானித்தான்.

கப்பல் நடுக்கடலில் முறிந்து தனித்தனியே [illegible] இவ்விருவரும் இப்பொழுதுதான் கூடுகின்றனர். ஆதலின், அமல நாதன் வாமனனை நோக்கி, "நண்பா! இந்தக் குழப்பம் இருக்கட்டும். கப்பல் முறிந்தபோது இதுவரை நீ செய்த வீர தீரச் செயல்களைப்பற்றி ஆதியோடு அந்தமாகக் கூறுக," என்று கேட்டான். அமல நாதனுக்குக் கப்பல் எப்படி முறிந்தது என்பதுகூடத் தெரியாது. ஆதலால், அதனையும் அமலநாதன் அறியுமாறு, நண்பா! நாம் ஏறி வந்த கப்பல் கற்பாறையில் மோதுண்டு முறிந்தது.

முறிந்ததும் சிறு படகின் துணையால் கரையை அடைந்தேன். இந்த முறிவுக்குக் காரணம் நான் தான் என்று என்மீது கப்பற்றலைவன் சினம் கொண்டு, கரையை அடைந்ததும் என்னை அரசாங்க விரோதி என்ற காரணத்தால் கைதியாக்கிப் போலீசாரிடம் ஒப்புவிக்க எண்ணினான். எனக்கு நல்லகாலம் இருந்ததால், மாலுமிகளில் ஒருவன் என்பக்கம் சார்ந்த காரணத்தால் திடுமென ஓட்டம் பிடித்தேன். பிறகு அவர்களுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் போரிட்டுக் கொண்டனர். இதுவே நடந்த நிகழ்ச்சி எனக் கூறி முடித்தான்.

வாமனன் மிகச் சமர்த்தன். அவன் அமல நாத னோடு பேசிக் கொண்டுதான் இருந்தான். ஆனால் அவன் பார்வைமட்டும் சுற்றுமுற்றும் இருந்தது. தன்னை அரசாங்கத்தார் தேடுவர் "என்பது அவனுக் குத் தெரியும். அவன் எண்ணியபடியே வீரர் கூட் டம் இவர்களைப் பற்றுதற்கு அடுத்தாற்போல் இருப் பதை அறிந்து தன் தோழனை அமல நாதனிடம் "நண்பா! நாம் இனி இங்கு இருப்பின் ஏதம் ஏற் படும். இந்த இடத்தை விட்டுப் பாதுகாவலான இடத்தை அடைவோம் புறப்படு" என்றுசொல்லி இருவரும் அவணின்றும் அகன்றனர்.

9. தருமன் இல்லம்

இங்ஙனம் புறப்பட்ட இருவரும் பேச்சின்றி அமைதியோடு நீண்டதூரம் நடந்து சென்று, வாம னனுக்கு நெருங்கிய நண்பனும் தன் குழுவின் தலை வனுமான தருமன் என்பவன் வீட்டை அடைந்தனர்.

[illegible]வன் தானும் தன் மனைவியும் தன் பிள்ளைகளுமாக [illegible]ாழ்ந்து வந்தனன். அவன் வீடு தன் அளவில் தன் [illegible] அளவில் அமைதியாக இருந்திலது. வீடு [illegible] [illegible]ப்பத்துடனும் மக்கள் நடமாட்டம் மிகுதி யாகவும் காணப்பட்டது. அவன் வீட்டில் இருந்த பணியாளர்கள் ஓய்வு சிறிதும் இன்றி இங்கும் அங்கும் [illegible]க் கொண்டிருந்தனர். அவர்கள் தம் கைகளில் சில பொருள்களை எடுத்துச் சென்று அவற்றுள் மறைத்து வைக்க வேண்டியவற்றை மறைத்தனர்; [illegible]த்த வேண்டியவற்றைக் கொளுத்தினர்.

தருமன் அமலநாதனையும் வாமனனையும் அன் புடன் வரவேற்றான். வரவேற்பு அன்புடன் இருந் [illegible] அவன் மனம் அமைதியாக இருந்திலது. [illegible] அவன் அரசாங்க சேனைவீரன் கொலையுண் [illegible] [illegible] யுற்றிருந்தான். அவன் கொலை [illegible] ரண்டை சச்சரவு காரணமாக உண்டான [illegible]. அரசியல் மனவேறுபாடு குறித்தும் [illegible] காரணமாகவும் நிகழ்ந்த கொலையாதலின், [illegible] கூட்டாளிகள் எந்தநேரத்திலும். [illegible]ன் வீட்டிற்கு வந்து கொலை செய்தவன் இன்னான் [illegible] என்று உசாவுவர் என்றும் பீதி [illegible]ந்தான். அதனால் தன்பால் வைத்திருந்த [illegible] எல்லாம் மறைத்து வைக்கத் தொடங்கி [illegible] தன் கட்சிக் கூட்டாளிகளுக்கும் [illegible] நடந்த செய்திகள் அடங்கிய கடி [illegible] கொளுத்திக் கொண்டிருந்தான். கொலை [illegible] தன் கட்சிக்கு எதிர்க் கட்சியின் தலை [illegible], அவன் கொலையுண்டது குறித்

துத் தருமனுக்கு அவ்வளவு மகிழ்ச்சி கிடையாது. தருமன் ஏதோ ஒரு கட்சியில் நுழைந்து வாழ வேண்டுமென நோக்கம் கொண்டவனே அன்றித் தன் கட்சி செய்யும் அழிவு வேலைகளுக்கு எல்லாம் உடன்பட்டு இருக்கவேண்டும் என்னும் நோக்கங் கொண்டவன் அல்லன். தன் வாழ்வை அமைதியாகக் கழிக்க வேண்டுமென்னும் எண்ணமுடையவன். சுருங்கக் கூறுவோமானல் அவன் நல்லவன் என்றே சொல்ல வேண்டும். ஆனல் அவனுக்கு அரசியல் கட்சிக்கு எதிரான கட்சியில் ஈடுபாடு இருந்தாலும், அதனல் அவனுக்கு அரசியல் கட்சியை வெறுக்கவேண்டும் என்பது எண்ணம் அன்று. இரு கட்சிகளையும் புண்படுத்தாத நிலையில் தன் வாழ்வை நடத்தவேண்டுமென்னும் பரந்த நோக்கம் அவன்பால் இருந்து வந்தது.

இந்த நிலையில் கொலைக்குக் காரணமான இருவருமே அவன் வீட்டில் வந்திருக்கின்றனர். அவனுக்குக் கொலை செய்தவன் யாவன் என்பது தெரியவந்தது. இதனல் வெகு விரைவில் தன் வீடு அரசாங்க அதிகாரிகளால் முற்றுகை இடப்படும் என்னும் உறுதி ஏற்பட்டுவிட்டது. தானே கொலையாளி என்றோ, கொலை செய்தவனுக்குத் துணையாக இருந்தவன் என்றோ அரசியல்அதிகாரிகளால் ஐயுறவுகொள்ளப்பட்டுத் தான் சிறை செய்யப்படலா மென்றும் அச்சங் கொண்டான். ஆகவே, இனி ஒரு விநாடியும் வாமனனைத் தன் வீட்டில் இருக்கச் செய்வது குற்றம் என்று உணர்ந்தான். வாமனன் தன் வீட்டில் இருந்தால் அரசாங்க அதிகாரிகளுக்குத் தீராத ஐயங்கள்

[illegible]ம் தோன்றிப் பலவித இடர்ப்பாடுகளுக்கு இடம் [illegible]டாகும் என்று எண்ணினன். இதன்பொருட்டு [illegible]லும் முன்னேற்பாடு செய்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று வாமனனோடு இது குறித்து [illegible]சித்துத் தனக்கேனும், தன் நண்பன் வாமனனுக்கேனும் மற்றும் எவருக்கேனும் ஒருவித [illegible]த்தும் இன்றித் தப்ப எண்ணங் கொண்டான். [illegible]ரம் தருமனும் வாமனனும் உரையாடிய [illegible] தருமன் தன் நண்பனை வாமனனிடம் அந்த [illegible]விட்டு உடனே அகலுமாறு வேண்டிக் [illegible]ன். வாமனன் செல்லும் வழியில் உணவின் [illegible] துன்புறாதிருக்க உணவுப் பொருளும் [illegible] பணமும் கொடுப்பதாகக் கூறி அவ் [illegible] கொடுத்தான். தருமன் கொடுத்த பணம் [illegible] என்று வாமனன் அவனுக்கு அறிவித்தான். [illegible] இன்னது செய்வது என்பது தெரிய [illegible] என்றாலும் தன் நண்பனுக்கு உதவி [illegible] எண்ணங்கொண்டு, வாமனன் இருக்கும் [illegible] பின்னால் அனுப்புவதாக வாக்குக் [illegible] இதுவும் சரியான முறைதான் [illegible] வாமனன் ஒப்புக் கொண்டான். மற்றொரு [illegible] வாமனனுக்குத் தருமன் அறிவித்தான். [illegible] தான் அரசாங்கத்தாரிடம் கொலையில் [illegible] தொடர்பும் இல்லை என்று அறி[illegible] கொள்வதோடு நில்லாமல் கொலைசெய்தவ[illegible] பிடிப்பதில் யார் துணை செய்கிறார்களோ [illegible] சன்மானம் தருவதாகவும் தான் அர சாங்கத்தாருக்கு அறிவிக்கப்போவதாகவும் கூறி

ஞன். இப்படி முன்கூட்டி அரசாங்கத் துப்பறியும் இலாகாவுக்கு அறிவித்துவிட்டால், தான் கொலைக்குக் காரணமானவன் என்று எண்ணும் ஐயம் தீர்ந்து விடும் என்பது தருமன் யோசனை. கொலை செய்தவன் வாமனன்தான் என்பதையும் பகிரங்கப்படுத்தி, வாமனனின் உருவமும், அவன் கூட்டாளியான அமல நாதனின் உருவமும் இரண்டும் அச்சடித்து வழங்கி இந்த அடையாளம் உள்ளவனைக் கண்டு பிடியுங்கள் என்று விளம்பரப்படுத்தப்போவதாகவும் கூறினன். நான் இப்படிச் செய்யாவிட்டாலும் துப்பறியும் இலாகாவினர் எப்படியும் உம்மிருவர் உருவங்களையும் அச்சடித்து வெளியிடுவர் என்பதையும் அறிவித்தனன். இதுவல்லவோ இராஜதந்திரம் என்பது! கோழியும் திருடிவிட்டுக் கூடவும் குலாவுவதுபோல் என்னும் பழமொழியின் உண்மை தருமன் பேச்சிலிருந்து உணர்ந்து கொள்ளலாம் அல்லவா. இந்தத் தருணத்தில் குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுவதுபோல என்னும் பழமொழியை எண்ணியும் தருமன் செயலை ஆராயலாம். நிற்க,

தருமன் தன்னையும் தன் நண்பன் அமல நாதன் உருவத்தையும் வெளிப் படுத்துவதாகக் கூறிய மொழியை வாமனன் கேட்டுத் தன் உருவம் வெளிப் படுத்துவது குறித்துத் தான் சிறிதும் அஞ்சவில்லை என்றும், ஆனல் தன் நண்பனை அமலநாதனின் உருவத்தை வெளிப்படுத்துவது குறித்துமட்டும் தனக்குச் சம்மதம் இல்லை என்றும் அறிவித்தான். தன் நண்பனை அமல நாதனை இவ்வாறன கொலைக் குற்றத்தில் ஈடுபடுத்த வாமனன் சிறிதும் விரும்பவில்லை.

இவ்வாறு வாமனனும் தருமனும் உரையாடிக் கொண்டிருந்த அனைத்தையும் அமலநாதன் மறைவாக இருந்து கேட்டுக் கொண்டிருந்தான். இவர்கள் பேசி முடித்ததும், அமலநாதன் தருமன் முன் வந்து நின்றான். அவன் தருமனும், தருமன் மனைவியும் மிகவும் ஆபத்தான நிலையில் சிக்குண்டிருப்பதை உணர்ந்தான். அவன் குடும்பம் தத்தளிப்பதை அமலநாதன் விரும்பவில்லை. ஆகவே, தன்னையும் உருவத்தின் மூலம் வெளிப்படுத்திக் கொலைக்குக் காரணமானவன் என்று அறிவிப்பதில் தனக்கு எவ்விதத் தடையும் இல்லை என்று கூறினான். இவ்வாறு அமலநாதன் தானே கூறியதைக் கேட்ட தருமன் மனைவி மிகவும் ஆச்சரியப்பட்டாள். தன் குடும்பத்தைப் பேர் ஆபத்திலிருந்து காப்பாற்ற தன்னலமற்ற துணிகரத்துடன் முன்வந்து தன்னை வெளிப்படுத்திச் சொன்னது குறித்து அவனைப்பாராட்டினாள். அதன்பொருட்டு அமலநாதனுக்குத் தன் [illegible] வணக்கத்தையும் தெரிவித்தாள். இப்படி அமலநாதன் நடந்து கொண்டதை நாம் காணும்போது நாயனார்,

> ' அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு.'

என்னும் குறளும் அதன் ஆழ்ந்த உட்பொருளும் நம் நினைவிற்கு வருகின்றன அல்லவா!

வாமனன் தன் கருத்தாக யாதொன்றும் சொல்லவில்லை. அமலநாதனே தன்னை வெளிப்படுத்தி விட்டதில் கவலையில்லை என்று சொல்லும்போது

வாமனனுக்கு என்ன பேச்சு இருக்கிறது? ஆனல் வாமனன் அமல நாதனுடைய இளகிய மனத்தையும் மனேதைரியத்தையும் கண்டு தன் உள்ளுக்குள் அவனைப் பாராட்டினன். பிறகு இருவரும் நள்ளிரவில் தருமன் வீட்டைவிட்டு வெளி ஏறினர்.

9. வழி நடைச் செலவு

வாமனனும் அமல நாதனும் இரவு எல்லாம் காடுகளையும் கற்பாறைகளையும், பள்ளத்தாக்குகளையும் கடந்து போய்க்கொண்டிருந்தனர். இடை வழிகளில் வாமனனது கட்சியினர் சிறு சிறு குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். அவர்களைக் காணும்தோறும் அமல நாதனைத் தனக்குப் பின்னல் வருமாறு சிறிது நேரம் நிறுத்தித் தன் கட்சியினரிடத்தில், எதிர்க் கட்சித் தலைவனுன அரசாங்க வீரர் அனுகி ஏதேனும் சேனு வீரன் கொலையைப்பற்றிக் கேட்டால், கேள்விகளுக்கேற்ற விடைகளைக் கூறுமாறு சொல்லிவிட்டு மேலே சென்று கொண்டிருந்தான். இதற்கிடையில் பொழுதும் புலர்ந்தது. இருவரும் ஒரு பரந்த பள்ளத்தாக்கை அடைந்தனர். அஃது எதிரிகளின் வீரர்களால் காக்கப்படும் நிலப்பரப்பு என்பதை அறிந்துகொண்ட வாமனனும் அமல நாதனும் அவ்விடத்தில் சிறிதும் தாமதியாமல் மேலே நடக்கலுற்றனர். இருவரும் ஆற்றேரமாக வரும்போது, எதிரே ஒரு பாறை இருப்பதைக் கண்டனர். இடையிலே ஆறு. எதிரில் பாறை. அந்தப் பாறையில் குதிக்கவேண்டும். ஆனல் ஆறு அகன்று இல்லாமல் குறுகி இருந்ததனல் இப் பக்கம் இருந்து அப்பக்கம் தாண்டக்கூடிய வசதி

[illegible] இருந்தது. வாமனன் தன் நண்பனை அமல நாதனிடம் எப்படி அடுத்த பக்கம் குதிப்பது என்பதைக் கூறினான். என்றாலும், அமல நாதனுக்கு அப்படிக் குதிக்கவும், தாண்டிடவும் பழக்கம் இல்லாமையால், அதைத் தன்னால் முடியாது என்று கூறிவிட்டான்.

வாமனன் எடுத்த காரியத்தை எப்படியும் சாதிக்கக் கூடியவன். அமல நாதனை எப்படியும் தாண்டச் செய்யவேண்டும் என்பதற்காகத் தன்னிடம் இருந்த திராட்சை ரசத்தைச் சிறிது பருகுமாறு தந்து, அவனுக்கு உணர்ச்சியை ஊட்டினான். பிறகு வாமனன் முதலில் ஆற்றைத் தாண்டினான். அடுத்தபடி அமல நாதன் தாண்டும்போது, சரியாக அடுத்த பக்கத்தில் குதிக்க முடியாமல் பாறையில் தொங்கினான். அப்பொழுது வாமனன் அவன் தலைமயிரைப் பிடித்துத் தூக்கி மேலே விட்டான். இருவரும் மேலே சிறிது தூரம் நடந்தனர். மற்றும் ஓர் ஆறு குறுக்கிட்டது. அதையும் கடந்து எதிரேயுள்ள பாறையை அடைய வேண்டும். வாமனனுக்கு இதைப்பற்றிக் கவலை இல்லை. அமல நாதனுக்குத்தான் கஷ்டமாக இருந்தது. மீண்டும் அமல நாதனுக்கு ஊக்கம் ஊட்ட வாமனன் தன்னிடம் இருந்த திராட்சை ரசத்தைக் கொடுத்தான். அதன் மயக்கத்தால் அமல நாதன் மீண்டும் உணர்ச்சிபெற்று அவ்வாற்றையும் கடக்கத் துணிவு கொண்டான். எப்படியோ இருவரும் எதிரே இருந்த பாறையினை அடைந்துவிட்டனர்.

இருவரும் அப்போது எவரும் தம்மை அறிந்து கொள்ள முடியாத மறைவிடத்தில் இருந்தனர். அந்

தப் பாறையின் மறைவில் இருவரும் உரையாடத் தொடங்கினர். பகைவர்களின் கையில் சிக்காமல் இருப்பதற்காகவே வாமனன், அந்த இருளில் வழி நடக்கலுற்றான். அமல நாதனும் தன்னுடன் இருந்து இந்தக் கஷ்டங்களை அனுபவித்து வருவது குறித்து அவனைப் பாராட்டிப் பேசினான். இருவரும் அங் கேயே சிலமணி நேரம் இருக்கத் தீர்மானித்தனர். தம்மை நாடிப் பகைவர்களின் வீரர் வரக்கூடும் என்ற காரணத்தால், ஒருவர் உறங்கும்போது மற்றொருவர் விழித்துக் கொண்டு இருவரும் சிறிது கண்ணயர்ந்து களைப்பைப் போக்கிக் கொண்டனர். இவர்கள் நினைத்தபடியே பகைவரது வீரர்களின் கூட்டம் திரள்திரளாக வந்து தாக்கத் தலைப்பட்டது. பாறை யில் இவ்விருவரும் தங்கத் தீர்மானித்தாலும் வெய்யில் மிகுதியால் பாறை இவர்கள் இருக்க இடந் தந்திலது. அவ்விடத்தை விட்டுச் சென்றாலோ எப் படியும் பகைவர் கையில் சிக்கவேண்டி வரும். இவ் வாறு இவ்விருவரும் இருதலைக் கொள்ளி எறும்பு போல் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். என்றாலும், பாறையின் வெம்மை இவர்களை இருக்க வைக்கவில்லை. என் செய்வார் பாவம்! பகைவர்களின் கண்களுக்குத் தெரியாமல், பாறையைவிட்டு மெல்ல இறங்கினர். ஓர் ஆற்றை அடைந்தனர். அங்குத் தம் வெம்மை தீரக் குளித்தனர். தாகம் அடங்கத் தண்ணீரையும் பருகினர். அங்கேயே ஒரு மறைவில் பதுங்கிக்கொண் டனர். நன்கு இருட்டிய பிறகு மேலே செல்வோம் என்று தீர்மானித்தனர். இரவும் வந்துற்றது. சந்திர னும் தன் தண்ணொளிகாட்டி இவ்விருவர்களின் போக்

[illegible] போல் ஒளி வீசிக் கொண்டிருந் [illegible] நண்பன் அமல நாதனும் தம் [illegible] காவலில் இருந்து வெகு [illegible] அறிந்து, தம் இருப்பிடத்தை [illegible] என்று காரணத்தால், தாம் [illegible] வழிப் பயணம் சிரமம் இல்லாமல் இருக்க, [illegible] பாடத் தொடங்கினர்.

[illegible] இருவரும் ஆனந்தமாகப் பாடிக் [illegible] மானதும் மேகம் தவழப்பட்டதுமான [illegible] அடைந்தனர். அப்பாறை தன் [illegible] பெரிதும் வாழும்படியான சேமபுரம் [illegible] ஊருக்கு அண்மையதாக இருந்தது. [illegible] இனித் தமக்கு அதிகமான ஆபத்து [illegible] என்று நிடங்கொண்டு, அமல நாதனை [illegible], இனி நமக்கு ஆபத்து இல்லை. இது நம் [illegible] வாழும் இடமான சேமபுரம். ஆகவே [illegible] செல்வோம். நான் தனியே சென்று [illegible] சந்தித்து ஏதேனும் புதிதாகச் [illegible] இருந்தால் அறிந்து வருகின்றேன் என்று [illegible] அவனை ஓர் இடத்தில் இருக்கச்செய்து [illegible] சென்று சில செய்திகளை அறிந்துகொண் [illegible] தன் செலவுக்குப் பணம் அனுப்புவ [illegible] நினைவுக்கு வரவே, அவனுக்குக் கடிதம் [illegible]. பிறகு அமல நாதன் இருந்த இடத்தை [illegible]. இருவரும் சேமபுரத்தில் ஐந்து நாட் [illegible] இருந்தனர். நண்பர் ஒருவர் இல்லத்திலும் [illegible] சோறு சமைத்து உண்ணத் தொடங்கினர். [illegible] இருந்த ஓட்ஸ் உணவைச் சமைத்துக்கொண்

டார்கள். தாம் ஆற்றில் பிடித்த மீன்களைப் பக்குவப் படுத்தி யுண்டனர். ஒழிந்த நேரங்களில் வாமனன் அமல நாதனுக்குக் கத்தியினை எப்படிப் பயன்படுத்தித் தன்னைப் பாதுகாத்து எதிரிகளைத் தாக்குவது என்பதைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தான். இவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு ஒரு முரட்டு ஆள் வந்தான். அவனிடம் வாமனன், தருமனிடம் போய்ச் செய்திகளை அறிந்து வருமாறு கூறினன். அவ்வாள் தனக்கு மறதி மிகுதி ஆதலினல் எழுதிக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டான். வாமனன் பணம் அனுப்புமாறு தருமனுக்கு ஒரு கடிதம் எழுதினன்.

கடிதம் எடுத்துச் சென்றவன் திரும்பிவர மூன்று நாட்கள் ஆயின. அப்படி ஆகியும், அவன் கொண்டு வரும் பதில் அவ்வளவு உற்சாகம் ஊட்டுவதாகக் காணப்படவில்லை. அவன் கொண்டுவந்த செய்திகளிலிருந்து தருமனும் அவனைச் சார்ந்த வேலைக்காரர்களும் எதிர்க் கட்சியினரால் சிறைப்படுத்தப் பட்டனர் என்ற செய்தி தெரியவந்தது. தருமன் மனைவி மிகுந்த சிரமத்தோடு சிறு தொகையை அனுப்பி வைத்தாள். அதனோடு வாமனன், அமல நாதன் ஆகிய இருவரது தோற்றங்களில் அடையாளங்கள் எழுதி வெளியிடப்பட்ட துண்டு அறிக்கையினையும் அனுப்பி வைத்தாள். அதில் குறிப்பிடப் பட்ட கடிதம் இருவரைப்பற்றிய அடையாளங்கள் எல்லாம் சரியாகவே இருந்தன. ஆனல், ஆடைகளில் மட்டும் சிறிது வேறுபாடு காட்டப்பட்டிருந்தது. அப்போது அமல நாதன் வாமனனை நோக்கி, “வாமனா நாம் எதிரிகளின் கைக்குள் அகப்படாமல் இருக்க ந

[illegible] மாற்றிக் கொள்வோம்" என்று கூறினான். ஆனால் வாமனன் அதற்கு இணங்கவில்லை; அப்படிச் செய்வது கோழைத்தனம் என்று கூறி விட்டான்.

அமலநாதனுக்கு வாமனனை விட்டுப் பிரிந்து விடவேண்டும் என்பது எண்ணம். இருவரும் அகப்பட்டுக் கொண்டால் இருவரும் பேராபத்துக்குள்ளாக வேண்டும். மேலும், வாமனன் தன்னிலும் பெருங் குற்றவாளி என்பதும் அமலநாதனுக்குத் தெரியவந்தது. வாமனன் சேனைவீரனைக் கொன்றதோடு அல்லாமல் முன்பே பல குற்றங்களுக்கு ஆளாகி இருப்பதால் அவனுக்குத் தூக்குத் தண்டனை தவிர்த்து வேறு தண்டனை இல்லை என்பதையும் உணர்ந்தான். தான் வெள்ளை அரசாங்கக் கட்சியினரால் சிறை செய்யப்பட்டாலும் கொலைக் குற்றத்திற்கு ஆளானவன் என்று நிரூபிக்கத்தக்க சான்றுகள் ஒன்றும் இல்லை என்பதையும் உணர்ந்து கொண்டான். இப்படி எல்லாவற்றையும் உணர்ந்தும் தான் இனி இக்கட்சியுடன் இருந்தும் ஆபத்தில் சிக்குவதில் புண்ணியம் இல்லை என்று தீர்மானித்து வாமனனிடமிருந்து பிரிந்து தன்போக்கில் போக எண்ணங் கொண்டான். மீண்டும் சீ! இப்படிச் செய்வது கோழைத்தனம். ஆபத்தான நிலையில் வாமனனை விட்டுப் பிரியலாமா?

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்பது நம் முன்னோர் முதுமொழி யன்றோ? மேலும், நம்மை அக்கொடிய வங்கநாதனிடமிருந்து

மீட்டவனை வாமனனை விட்டுப் பிரியலாமோ என்று சிந்தித்து வாமனனோடு கூடவேஇருந்து இன் துன்பங்களை அனுபவிக்கத் திடங் கொண்டான்.

வாமனனும் அமல நாதனும் சேமபுரத்தை விடுக் கிளம்பினர். இரவில், இருவரும் வழி நடந்ததனு களைப்புற்று இடையிடையே அமல நாதன் சோ விழ நேர்ந்தது. நாம் ஏன் இந்தத் துன்பங்களை அனு பவிக்க வேண்டும் என்று அமல நாதன் கருதவு தொடங்கினான். தானாக வாமனனை விட்டுப் போக திடமில்லாமல், வாமனனேனும் தன்னை விட்டு போகுமாறு செய்யமாட்டானா என்று எதிர்பார்த்து கொண்டிருந்தான். ஆனால் இவ்வாறான எண்ண கொண்டுள்ளான் அமல நாதன் என்பது வாமனனு குத்தெரியாது. இத்தகைய மனக்குழப்பமான நிலையி ஓர் இடத்தை அடைந்த இருவரும் சிறிது உறங் எண்ணினர். இருவரும் ஒரே சமயத்தில் உறங்கினு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிடும் என்று கருதி முல போல இருவரும் மாறிமாறி ஒருவர் உறங்கும்போது மற்றொருவர் விழித்திருந்து, பார்த்துக் கொள் வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டனர். வா னன் சிறிது கண்ணயர்ந்தான். அமல நாதன் விழி திருக்க வேண்டியதாயிற்று. ஆனால், அமல நா னுக்கு இருந்த களைப்பால் தன் கடமையைச் செய் இயலாமல் தானும் உறங்கிவிட்டான். திடுமெ அவன் விழித்து எழுந்தபோது ஒரு சிறு வீரர் கூ டம் தான் இருக்கும் இடத்தை நோக்கி வருவதை கண்ணுற்றான். உடனே வாமனனை எழுப்பினா வாமனன் தன் எதிரே வீரர் குழுவினர் வருவதை

...ற்புதம் தான் பேராபத்தில் சிக்கிக் கொண்டு ...ம் தீர்மானித்து விட்டான். என்றாலும் தைரி... ...ம்... ...யா...தயாகி நாலாபக்கமும் புதர் ...க இடமாக இருவரும் தம்மை மறைத்துக் கொண்டு ...ந் தொடங்கினர். எதிரிகள் நீரூட்டிக் ...ருந்த இடத்துக்கு அருகிலேயே இருவரும் ...யில் ...ன் புகையும், சாம்பலும் இவர்களைத் ...பின, ...ச் செய்தன என்றாலும் இத்துன்பத் ...பொறுத்துக்கொண்டு போகலாயினர். வாம ...ம் செல்லலானான். அமல நாதனல் போக ...லை. தான் இனி ஓர் அடிகூட நடக்க ...என்று கூறிவிட்டான். இங்கேயே உயிரை ...ன் என்றுங் கூடக் கூறிவிட்டான்.

...அமலநாதனைத் தூக்கிக்கொண்டுபோவ... ...ன். அமல நாதன் இந்தத் தொந்தரவை ...கொடுக்கக் கூடாதென்று நடந்து வரு... ...ன். இப்படி வழிகளைக் கடந்து இரு... ...போகிறோம் என்ற நினைவே இல் ...யில் அவ்வளவு களைத்துப் போயினர். ...ள் மாலைப்பொழுதுகாலம் நெருங்கியது. அப்போது ...மனிதர்கள் இவ்விருவர்களையும் தள் ...யில் வீழச்செய்து, தொண்டைக்கு நேரே ...ர். அமல நாதன் பயந்துபோனான். ...செய்துவந்த முயற்சிகளும் வீரதீரச் செயல் ...பயனற்றுப் போயின. நாம் பகைவர் கையில் ...கொண்டோம் என்று தீர்மானித்து விட் ...ன் ஆனல், வாமனன் அந்நால்வருள் ஒருவனு ...மையாக அவர்கள் பகைவர்கள் அல்லர் என்

யத்தை உணர்ந்து கொண்டான். அவர்களும் அரசாங்க எதிர்க் கட்சியினர் என்பதையும் அறிந்துகொண் டான். அமல நாதனிடம், 'நீ பயப்பட வேண்டா. நாம் பகைவர் கையில் சிக்கவில்லை. நம்மைப் போன்ற ஒரு கட்சியினர் கையில்தான் சிக்கியுள்ளோம். அவர் களும் நம் நண்பர்களே' என்றனன். பிறகு வாமனன் சிறிது உறங்கலாயினன். ஆனால் அமல நாதனுக்கு உறக்கமும் வரவில்லை. அமைதியும் நிலவவில்லை. அளவுகடந்து தொடர்ந்து நடந்த காரணத்தால் சுரத் தால் பீடிக்கப்பட்டான். வாமனன்மட்டும் சுறுசுறுப் பும் உற்சாகமும் கொண்டிருந்தான்; பிறகு அங்கு இருந்த வீரர்களுடன் அவர்களின் தலைவன் வாழும் இடமாகிய சிகரபுரியை அடைந்தனர்.

10. சிறு சச்சரவு

சிகரபுரி, மக்கள் வாழ்தற்குரிய இடம் அன்று. அது பதுங்குதற்கு என அமைத்துக் கொள்ளப்பட்ட ஓர் அறையினைமட்டும் மலை உச்சியில் கொண்டது. அந்த அறையில் ஒரே சமயத்தில் ஐந்தாறு பேர்களே தங்க வசதியுண்டு. அத்தகைய அறையில் இருந்து மல்லன் என்னும் பெயரிய கட்சித் தலைவன் வெளியே வந்து, வாமனனையும் அமல நாதனையும் நல்வரவு கூறி வரவேற்றனன். அவன் பார்வைக்கு ஏழ்மைக்கு உறைவிடமானவனைக் காணப்பட்டாலும் நடத்தை யில் மன்னன்போல் விளங்கினன். தன்னுடைய வாழ்க்கையைக் குறித்து வாமனனிடம் கூறினன். தன்னை நண்பர்களோ உறவினர்களோ வந்து காண் பதாயின் இரவில்தான் வந்து காணவேண்டும் என்

[illegible] கூறினன். பகலில் அவர்கள் வந்து போவதா [illegible] இரகசிய வாழ்வு தெரிந்து அரசாங்கத்தா [illegible] செய்யப்பட்டு விடுவான் என்பதையும் [illegible]. தன் சொத்துச் சுதந்திரங்கள் அர [illegible] பறிமுதல் செய்யப்பட்டனவாயினும், [illegible] கொண்டவர்கள் தனக்கு வேண்டிய [illegible] பண உதவி செய்து வருவதாகவும் கூறி [illegible]. [illegible] மல்லன் வந்த விருந்தினர்கட்கு உணவு [illegible]. அதன்பின் காகிதம் ஆட வாமனனை [illegible]. அமல நாதனுக்கு மட்டும் காகிதம் [illegible] குறித்து வருத்தமே. அவன் [illegible] என்று சொல்லியும் வாமனனும் மல்ல [illegible] ஆடத் தொடங்கினர். அமலநாதன் தன் [illegible] அறையால் படுத்துஉறங்கலானன்; தன்னை [illegible] அவ்வறையில் என்ன நடக்கிறது [illegible] உணராதவனக இருந்தான்.

[illegible] தன்னிடம் இருந்த காசுகள் எல்லா [illegible] ஆட்டத்தில் தோல்வியுற்று, அமல [illegible] சென்று அவனிடம் இருக்கும் காசினைத் [illegible] வேண்டினன். அமல நாதன் நோயால் [illegible] கொண்டிருந்தான் என்றாலும் தன் நண்பன் [illegible] கேட்டபோது கொடுக்காமல் இருக்க [illegible], உதவிசெய்தான். அதனையும் வாம [illegible] விட்டான்

[illegible]! [illegible] எத்துணை கொடியது பார்த்தீர்களா! [illegible] திருவள்ளுவரும்,

"[illegible] பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
[illegible] தருவதுஒன் றில்."

என்றுகூறி இதனை எவரும் மேற்கொள்ளவே கூடா தென இவ்வளவு வன்மையாகக் கண்டித்தனர். இது நிற்க,

மருந்தும் விருந்தும் மூன்று நாட்கள் என்பர். அதன்படி இவ்விரு விருந்தினர்களும் வந்து மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டன. எனவே, அவர்கள் இடத்தை விட்டுக் கிளம்பத் தொடங்கினர். ஆனால், இதுவரையிலும் ஒரு செப்புக் காசுகூட இருப்பு இல்லை. எனவே வழி நடையை ஒரு காசும் இல்லாமற் கடப்பது எப்படி என்பதைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் மல்லன் தான் வாமனனிடம் சூதாட்டத்தில் வென்ற பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகக் கூறினான். என்றாலும் தோற்ற பணத்தைத் திருப்பிப் பெறுதல் குறித்து வாமனன் சிந்தனை செய்யலானான். சூதாடியாக் இருந்தாலும் அவன் மானமுள்ளவன் போலும்!

அமலநாதன் வெகு தந்திரசாலி. மல்லனைத் தனித்து அழைத்து, 'ஐயா' என்பவனிடமிருந்து வாமனன் பெற்றுவந்து உம்மிடம் தோற்ற காசினை மட்டும் என்னிடம் கொடுத்து விடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். மல்லனும் நேர்மையானவன். மல்லன் சூதாடியல்லன். தான் தனித்து [illegible] வாழவேண்டி இருந்தமையால் பொழுது போவதற்கு இதனை ஒரு கருவியாகக் கொண்டவன். காசு வைத்து ஆடவில்லையாயின் ஆட்டம் உற்சாகமாக இராதே என்பதற்காகச் சிறு காசு வைத்து ஆடி வந்தான். ஆகவே, அமலநாதன் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டான். அதன்பின் வாமனனும் அமலநாதனும் வெளியேறினர்.

இருவரும் பேச்சு வார்த்தை இல்லாமல் போய்க் கொண்டிருந்தனர். வாமனனுக்குத் தான் செய்தது தவறு என்றுபட்டது. அமலநாதனும் தன் பணத்தை மல்லனிடமிருந்து வாங்கிக் கொண்டதைக் குறித்துச் சிந்தித்தான். இத்துடன் வாமனனிடமிருந்து பிரிந்து போய்விடலாமோ என்றும் எண்ணினன். ஆனல் இந்தச் செயலைச் செய்ய இவனது மனம் இடம் கொடுக்கவில்லை. இப்படி இருவரும் நீண்டதூரம் ஒருவர்க்கொருவர் உரையாடாமல் போய்க் கொண்டிருந்தனர். எவ்வளவுதூரம் இப்படிப்போக முடியும்? மெல்ல வாமனன் தான் செய்ததவற்றுக்காக மன்னிப்புக்கேட்டனன். தான் செய்த இச்செயலுக்குத் தன்னைவிட்டு அமலநாதன் போய்விட எண்ணுகின்றனே என்றும் கேட்டான். ஆனல், அமலநாதன் தன்னைக் காத்துக் கொண்டு தன் நண்பனை ஆபத்தில் அகப்பட வைத்து விட்டுப் பிரிந்துபோக எண்ணவில்லை என்று கூறினன். இப்படி இவர்கள் பேசி ஒரு முடிவுக்கு வந்து சமாதானம் ஆயினர்.

இருவரும் தம்மை எதிரிகள் அறியாதிருக்க இரவில் பயணப்பட எண்ணினர். என்றாலும் அமலநாதனல் நடக்க இயலவில்லை. அமலநாதன் தன், உடல்நலக் குறைவால் இரண்டொரு முறை கீழேயே விழுந்தான். தான் நடப்பதே அரிதாக இருக்க, மல்லன் கொடுத்த உணவுப் பொருள்களையும்கொண்டு நடப்பது அவனுக்கு மிகவும் சிரமமாக இருந்தது, இதனை அறிந்த வாமனன் அந்த உணவுப் பொருள் மூட்டையைத் தான் சுமந்து வருவதாகவுங் கூறினன். ஆனல்அமலநாதன் அப்படிக்கொடுக்க விரும்பவில்லை.

அதனால் வாமனன் அமல நாதனைக் குறும்பான பெயர்களை வைத்துக் கூப்பிடத்தொடங்கினான். இஃது அமல நாதனுக்குப் பிடிக்காமல், தான் இறந்தவனைப் போல் பாசாங்குசெய்து சாலையில் படுத்துவிட எண்ணினான். எரியும் கொள்ளியை ஏறத் தள்ளுவதுபோல் வாமனன் மேலும் அமல நாதனை வேடிக்கை பண்ண ஆரம்பித்தான். இஃது அமல நாதனுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. வாமனன் அமல நாதனது இரக்கமான நிலையை உணர்ந்து அவனைக் கட்டித் தழுவி அவனைத் தன் தோளில் சுமந்து கொண்டு சென்றான்.

11. வழக்கறிஞன் இல்லம்

வாமனன் இளைஞனை அமல நாதனது உடற் சோர்வைக் கண்டு தூக்கிச் சென்றான். வழிகளைக் கடந்து வாமனன் தன் அருமை நண்பன் இல்லத்தை அடைந்தான். வாமனனும் அமல நாதனும் அங்குத் தங்கி இருந்தபோது பலரும் வந்து சந்தித்துப் பேசிச் சென்றனர். அமல நாதன் உடல்நலக் குறைவால் உருமாறிக் காணப்பட்டான். அவனை அடையாளம் கண்டுபிடிக்க எவராலும் முடியவில்லை. இருவரும் இதுவரை செய்த பிரயாணத்தினால் உண்டான சோர்வும் களைப்பும் நீங்கும்வரை இந்த நண்பன் வீட்டிலேயே தங்கி இருந்தனர். அமல நாதன் நாளுக்கு நாள் தன் நோய் நீங்கப்பெற்று நன்னிலை பெற்று வந்தான். இம்முறையில் ஒரு மாத காலம் வாமனன் தன் நண்பன் இல்லத்தில் தங்க நேர்ந்தது. ஆகவே, ஒரு மாதம் கழிந்ததும் இருவரும் அவ்வில்லத்தை

விட்டுப் புறப்பட்டனர். புறப்பட்டவர் நெடுந்தூரம் தென்திசை நோக்கிச் சென்றனர். அதன்பிறகு இவ் விருவர்களும் இனித் தம் பகைவர் கையில் சிக்குவ தற்கு வழியில்லை என்பதை உணர்ந்தனர்; இனித் தம்மை எவரும் பிடிக்கமாட்டார்கள் என்பதையும் அறிந்தனர்; இப்படி வழிகளைக் கடந்துவந்து ஓர் உணவு விடுதியில் தங்கினர்.

இவர்கள் தென்திசை நோக்கி வந்தபோது இடையே ஓர் ஆறு குறுக்கிட்டது. அதனை எப்படிக் கடந்து அடுத்த கரையினை அடைவது என்பது குறித் துச் சிந்தித்தனர். இறுதியில் இவர்கள் தங்கியிருந்த உணவு விடுதியிலுள்ள வேலைக்காரச் சிறுமியின் துணையால் ஒரு படகு கொண்டு ஆற்றைக் கடக்கத் தீர்மானித்தனர். உணவு விடுதிக்குத் திரும்பிவந்து, அமல நாதன் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கி ருன்; அவனை அரசாங்கம் கண்டு விடுமானல் கொலை செய்துவிடும்; ஆகவே, அவனைக் காப்பாற்ற நீ தான் உதவவேண்டும் என்றனன். சிறுமியும் அமல நாதனது பரிதாபகரமான நிலைமைக்கு இரங்கி, 'நான் ஒருபடகு கொண்டு வருகிறேன். நீங்கள் இன்று இரவு பதினொரு மணிக்கு இந்த ஆற்றங் கரையில் இருங்கள். உங்களை ஒருவரும் அறியாதபடி அக்கரையில் சேர்த்துவிடு கின்றேன்" என்று கூறினள். அவ்வாறே இவர்கள் அன்று இரவு அங்குவந்து இருக்க, இவர்களைப் படகில் ஏற்றி அக்கரையில் சேர்த்தனள். இருவரும் சிறுமிக்கு நன்றி செலுத்தினர். அவளும் திரும்பிச் சென்றனள்.

இதற்குள் பொழுதும் விடிந்தது. அமல நாதன் தன் நண்பன் வாமனனிடம் நான் என் சிறிய தந்தை

யாரின் வழக்கறிஞர் நல்லறிஞப் பிள்ளையைக் காண வேண்டும். கண்டு என் நிலைகளை உணர்த்த வேண்டும் என்று கூறி விடைபெற்றுச் சென்றான். அவன் வரும் வரையில் வாமனன் காத்துக் கொண்டிருந்தான்.

அமல நாதன் வழக்கறிஞர் நல்லறிஞப் பிள்ளையைக் கண்டான். வழக்கறிஞர் அமல நாதனைப் பற்றி நன்கு அறிந்தவர் ஆதலின், அவன் உண்மையில் அமல நாதன்தான் என்பதை அறியத் தூய செந்தமிழ் மொழியில் உரையாடியபோது, அமல நாதனும் அத் தூய செந்தமிழ் மொழியிலேயே விடை கூறினான். அதிலிருந்து வழக்கறிஞர் அமல நாதனைப்பற்றி ஐயம் கொள்ளாமல் அவனோடு உரையாடத் தொடங்கினார். அமல நாதனுடைய வரலாற்றைக் கூறுமாறு வழக்கறிஞர் கேட்க, அனைத்தையும் அமலநாதன் குறித்துக் கொடுத்தான். அதனோடு தன் சிற்றப்பனைக் கண்டு தனக்குரிய தான பாகத்தைக் கொடுப்பதற்கு உதவி செய்யுமாறு அவரையே துணைபுரியுமாறு வேண்டினான். மேலும், வழக்கறிஞர் நல்லவர்; வன்கண்ணனது கொடுமையை இப்பொழுது நன்கு அறிந்து கொண்டனர். அமல நாதனை மேல் படிப்புப் படிக்க வைக்கவேண்டிய அளவு பொருளைக் கொடுத்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்ததாகவும், அமலநாதன் ஏறிச்சென்ற கப்பல் கடலில் மூழ்கிவிட்டதாகவும், அமல நாதனும் இறந்துவிட்டான் என்று கூறியதும் பொய் என்பதை உணர்ந்துகொண்டார். பின்பு அமல நாதனிடம் சிற்றப்பனாகிய வன்கண்ணனுக்கும், அமலநாதன் தந்தையான கமலக்கண்ணனுக்கும் எப்

படிப் பகைமை மூண்டது என்பதையும் கூறத் தொடங்கினார்.

"அமல நாத! உன் தந்தையாரும் உன் சிற்றப்பனும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளே! இருவரும் அன்பாகத்தான் இருந்தார்கள். ஆனால், இவர்கள் விதி வசத்தால், இருவரும் ஒரே மாதினைக் காதலித்தனர். காதல் காரணமாக, உன் தந்தையார் தமக்குச் சேரவேண்டிய நில உரிமை, சொத்து உரிமை அனைத்தையும் தான் நேசிக்கும் மாதினை உன் சிற்றப்பன் நேசிக்காமல் விட்டு விட்டால் தந்து விடுவதாக வாக்களித்து விட்டார். அப்படியே வன்கண்ணன் தான் கொண்ட காதலை விடுத்துச் சொத்துக்குரியவனாகி விட்டனன். உன் தந்தை காதல் காரணமாகச் சொத்தை இழந்து பள்ளியாசிரியராகவே இருந்து காலங்கழித்து இறந்துபோயினார். சொத்தையும் உரிமையையும்பெற்ற உன் சிற்றப்பன் பொருளாசையினால், மிகுந்த கருமியாயினான். தானும் உண்ணாதும் உடுத்தாதும் வாழத் தொடங்கினான். தன் கிராமத்துக் குடிமக்களை வருத்தி வரிப் பணம் பெற்று அவர்களின் வசைகளுக்கு ஆளாயினன். திருமணமும் செய்து கொண்டிலன். உன் தந்தையார் தாம் செய்த தவற்றை உணர்ந்து தாம் இறக்கும்போது, உன் வாழ்வு கருதி ஒரு கடிதம் உன் சிற்றப்பனுக்கு எழுதினார். அதில் உனக்குச் சொத்து உரிமையில் ஏதேனும் கொடுத்து உன்னைக் காப்பாற்றும்படி எழுதி யிருந்தார். ஆனால், வன்கண்ணன் தன் கருமிக் குணத்தால் உனக்கு உதவச் சிறிதும் மனம் வைத்திலன். நீ உயிருடன் இருந்தால்

அவ்வளவு சொத்தும் உரிமையும் சட்டப்படி உன்னைச் சேர்ந்துவிடுமே என்று பயந்து உன்னை நாட்டை விட்டே ஓட்டிவிடவும், இறக்கும்படி செய்யவும் திட்டம் இட்டான். இதற்காகவே உன்னை மேல் மாடிக்கு இருட்டில் அனுப்பினன். இருட்டில் நீ படி தவறிக் கீழே விழுந்து இறக்கும்படி செய்யவேண்டும் என்பது அவன் எண்ணம். ஆனால் தெய்வாதீனமாக நீ பிழைத்துக் கொண்டாய். அடுத்தபடியாகவே உன்னைத் தன் நண்பன் வங்கநாதனிடம் ஒப்படைத்து வெளி நாட்டில் விட்டு விடும்படி செய்தான். இதுவே உன்னைப் பற்றியும் உன் தந்தையைப்பற்றியும் உன் சொத்து உரிமையைப்பற்றியும் உள்ள சுருங்கிய வரலாறு" என்று கூறி முடித்தார்.

அமலநாதன் வழக்கறிஞரை மிகவும் பணிவாக எப்படியும் தனக்கு உதவிசெய்து தன் சிற்றப்பனிடமிருந்து தன் உரிமையைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டான். தான் கப்பலில் பயணப்பட்ட போது, அக்கப்பலிலிருந்து அது பாறையில் மோதித் தாக்குண்டு கடலில் மூழ்கியதையும் அதிலிருந்து தப்பிய விதத்தையும் தனக்கு நேர்ந்த ஆபத்துக்களையும் நேரில்இருந்து கண்டு அவ்வாபத்திலிருந்து நீக்கிய தன் நண்பன் வாமனனைக் கேட்டுக் கொள்ளுமாறும் வழக்கறிஞரிடம் கூறினன். வழக்கறிஞர் தன் குமாஸ்தாவிடம் சட்டப்படி பத்திரம் எழுதுமாறு கட்டளையிட்டார். பிறகு அன்றுமாலை இருவரும் வாமனனைக் காணப் புறப்பட்டனர். வாமனன் நாட்டில் இராமல் மக்கள் நடமாட்டமற்ற ஒரு தனியிடத்தில் தங்கி இருந்தான். நெஞ்சில் கரவுடையார், கரப்பர் கரவார் கரவிலா

மொழிந்தவர்" அல்லவா? வாமனன் அரசாங்க விரோதியாயிற்றே. மேலும் கொலைக் குற்றத்திற்குரியவன் ஆயிற்றே! ஆகவே அவன் தன்னைக் கரந்து இருந்ததில் தவறில்லை.

12. உரிமைப் பேறு

வாமனனை அமல நாதனும் வழக்கறிஞரும் கண்டனர். பிறகு மூவருமாக இருளில் வழி நடந்து வன் கண்ணன் வாழ்ந்த இடத்தை அடைந்தனர். முன்னர் வாமனன் சென்றான்; கதவைத் தட்டினான். உள்ளிருந்த 'வன்கண்ணன்' யார் நீ? ஏன் இங்குவந்தாய்? இந்த இருட்டில் ஏன் இப்படி வந்து தொந்தரவு செய்கின்றனை? என்று கேட்டனன். வாமனன் அஞ்சா நெஞ்சினன் அல்லவா? நான் அமலநாதனைப் பற்றிய செய்தியினை அறிய வந்துள்ளேன் என்றனன். வன் கண்ணன் கைத் துப்பாக்கியுடன் வந்து கதவைத் திறந்தான். திறக்கும்போதே நீ வெகு எச்சரிக்கையாக இங்கு நடந்து கொள்ளவேண்டும். இல்லையேல் இந்தத் துப்பாக்கியால் உன்னைச் சுட்டுவிடுவேன் என்று பயமுறுத்தினன். இவற்றிற்கெல்லாம் பயந்து விடுவானே வாமனன். சிறிதும் அஞ்சாதவனாய் நான் நீண்டநேரம் உன்னிடம் பேச வரவில்லை; நீ அமல நாதன் சென்ற கப்பல் கடலில் மூழ்கியது என்றாலும் அவன் காப்பாற்றப்பட்டு என்வசத்தில் இருக்கிறான். அவனை உயிருடன் இங்குக் கொண்டுவந்தால் நீ என்ன வெகுமானம் தருவாய்? நீ அவனது உறவினன் என்றும், அவனது சிற்றப்பன் என்றும் அவன் கூறினான். என்ன பதில் கூறுகின்றாய்? என்று கூறினன்.

வன்கண்ணன் மகா கொடியன். எனவே,எனக்கு அமல நாதனைப்பற்றிய கவலை எதுவும் இல்லை: அவனை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள் என்று கூறிவிட்டான். சரி அவனைச் சிறையில் வைக்க உனக்குச் சம்மதமா? அப்படிச் சிறையில் வைத்தற்கு ஏற்பாடு செய்ய என்ன பணம் கொடுக்கிறாய்?” என்று கேட்டனன். வன்கண்ணன் எப்படியாகிலும் சிறு தொகையைக் கொடுத்து அமல நாதனின் தொந்தரவு இல்லாமல் இருக்கலாம் என்று கருதி, எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்டான். உடனே வாமனன் அமல நாதன் உயிருடன் இருப்பது நல்லதா அன்றிக் கொல்லப்படுவது உன் விருப்பமா என்று கேட்டனன். இக்கேள்வி வன்கண்ணனைச் சிறிது இரக்கங் கொள்ளச் செய்தது. தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் அல்லவா? தன் அண்ணன் மகன் கொல்லப்படுவதை வன்கண்ணன் விரும்பவில்லை. பேச்சு ஒன்றும் எழவில்லை. வாமனன் வன்கண்ணனை நோக்கிப் பல கேள்விகளைக் கேட்டான். வங்க நாதனுக்கு எவ்வளவு பணம் கொடுத்து அமல நாதனைக் கொண்டு போகச் சொன்னாய் என்று கேட்டனன். அதன்பொருட்டு ரூ. 300 கொடுத்ததாக வன்கண்ணன் கூறினான். இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் வழக்கறிஞர் நல்லறிஞப் பிள்ளையும் வந்து கலந்து கொண்டார். அமல நாதனும் உடன் வந்தனன்.

இந்த நிலையில் வன்கண்ணனுக்கு என்ன செய்வது என்பது புரியவில்லை. இனித் தான் தப்பமுடியாது என்பது புலனாயிற்று. வழக்கறிஞர் சொல்படி

[illegible] வேண்டும் என்று தீர்மானித்து விட்டான். வழக்கறிஞர் தாம் கொண்டுவந்த பத்திரத்தில் வாமனனைக் கையொப்பம் இடச் சொன்னர். அவ்வாறே கையொப்பம் இட்டனன். அந்தச் சொத்தில் மூன்றில் இரண்டு பங்கு அமலநாதனுக்குச் சேரவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. அமலநாதன் அல்லல்கள் ஒருவாறு முடிந்தன. வழக்கறிஞர் தமக்கு வேண்டிய கட்டணம் பெற்றுத் திரும்பினர்; அநாதையாக இருந்தோம் என்று எண்ணிய அமலநாதன், பெருஞ் செல்வத்திற்கு உரியவனானன். அல்லலே இறுதியில் ஆனந்தம் விளைவிக்கும் என்பதையுணர்ந்தான். பின்பு தன் அரிய நண்பன் வாமனன் தன் ஊர் போய்ச் சேர வேண்டிய அளவுக்குப் பொருளை ஈந்து அனுப்பினன். வாமனனும் பிரியா விடைபெற்றுப் போயினன். அமலநாதன் தன் பொருளைக்கொண்டு தன் குடும்பத்தின் பண்டைய பெருமையை மீண்டும் பெறத் தக்க வழி வகைகளைக் காண முனைந்து நின்றான்.

> ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்கம் உடையான் உழை."

கட்டுரைப் பயிற்சி

கீழ்வரும் ஒவ்வொரு தலைப்பினைக் குறித்தும் தனித்தனி இரண்டிரண்டு பக்கங்களில் ஒரு கட்டுரை எழுதுக:—

1. அமல நாதனும் ஆயத்சகாயனும்.
2. அமல நாதனும் அவன் சிற்றப்பன் இல்லமும.
3. அமல நாதனது கடற் பயணம்.
4. வங்க நாதனும் வாமனனும்.
5. அமல நாதன் - கப்பல் முறிவிற்குப் பிறகு பட்ட கஷ்டங்கள்.
6. அமல நாதனும் வாமனனும் மீண்டும் சந்திக்க நேர்ந்தமை.
7. வாமனனும் அவன் நண்பர்களும்.
8. அமல நாதன் தன் உரிமையைப் பெற்றவிதம்.